# ஆறாம் சக்தி

இந்திரா சௌந்தர்ராஜன்



# ஆறாம் சக்தி

**(வசித்வம்)**

## இந்திரா சௌந்தர்ராஜன்

மின்நூல் ஆக்கம்: தமிழ்நேசன்

# ஆறாம் சக்தி

## 1

அஷ்டமா சித்துகளில் ஆறாவதாக விளங்கும் சித்து 'வசித்வம்' என்னும் வசிய சக்தியாகும். வசிய சக்தி இரண்டு விதமானது. சில மூலிகைப் பொருட்களால் மந்திர தந்திரமாக செய்யப்படுவது ஒரு வகை சக்தி.

மனதை ஒருமுகப்படுத்தி எண்ணங்களைக் கொண்டு இந்த உலகத்தவரை வசப்படுத்துவது இன்னொரு வகை சக்தியாகும்.

முதல் வகையான மந்திர தந்திரமான சக்தியைப் பெற, அதர்வண மாயா வேதம் சில வழிமுறைகளைக் காட்டுகிறது. பீதாம்பர ஜாலம், மற்றும் மகேந்திர ஜாலம் என்னும் முறைக ளெல்லாமும் இதோடு சேர்ந்ததுதான்.

இது கிட்டத்தட்ட பாம்பு தேள், சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்களைப் பிடித்து, அவைகளை அடக்கி ஆளுவதைப் போன்ற ஒரு கடின வழிமுறையாகும்.

ஆனால் இரண்டாவது வகையான மனதை ஒரு முகப்படுத்தி எண்ணங்களைக் கொண்டு உலகத்தவரை வசப்படுத்துவதே சிறந்த வழிமுறையாகும்.

ஒரு ஆச்சரியமூட்டும் விஷயம் என்னவென்றால் இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரிடமும் ஒருவித வசீகர சக்தி இயல்பாகவே இருக்கிறது.

மயில் தனது அழகிய தோகையால் எல்லோரையும் வசீகரிக்கிறது. பாம்புகூட தனது அழகிய படத்தால்

*பார்ப்பவர்களை அப்படியே கட்டிப் போடுகிறது. மனிதர்கள் வரையில் சிலரது அழகு நம்மை வசீகரிக்கும். சிலரோ இனிய சொற்களால் நம்மை அப்படியே சொக்க வைத்து கட்டிப் போடுவார்கள். இதெல்லாம் இயல்பாக பிறவியிலேயே அமைந்த வசீகர அம்சங்கள் ஆகும்.*

*இதை வளர்த்துக் கொண்டு உச்சத்திற்கு செல்லவும் வழிகள் உள்ளன.*

*அவை...*

**அ**ந்தச் செய்தியை கேள்விப்பட்டதில் இருந்தே வசந் தனுக்கு நிலை கொள்ளவில்லை. ஆச்சரியமும் அதிர்ச்சியும் மாறி மாறி அவனை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது.

அவன், வீட்டில் உள்ள மொட்டை மாடியில் போய் உட்கார்ந்து கொண்டு விட்டான்.

பக்கத்து வீட்டு மொட்டை மாடியில் அந்த வீட்டுச் சிறுவர்கள் இரண்டு பேர் நின்று கொண்டு பட்டம் விட்டபடி இருந்தனர்.

இந்தப் பக்கமாக உள்ள வீட்டு மாடியில் ஏகாம்பர வாத்தியார் என்பவர் தனது வழக்கமான உடற் பயிற்சிகளில் மும்முரமாக இருந்தரர்.

அவர்கூட, வசந்தன் அமைதியாக அதே சமயம் தீவிர சிந்தனையில் இருப்பதை, அவ்வப்போது கவனித்துக் கொண்டுதானிருந்தார்.

அகலமான லங்கோடுத்துணியை ஜட்டி போல அணிந்

திருந்த ஏகாம்பர வாத்தியார், நல்ல உயரமான திடகாத்திரமான அவரது உடம்பில் எண்ணெய் பூசியது போல வியர்வை ஊறியிருந்தது. அவ்வப்போது ஒரு மாதிரி எகிறிக் குதித்து, முன் பாதத்தை வீச்சலாக தலைக்கு மேல்வருமளவு உயர்த்தி, அப்படியே கழுத்துக்கு பின்னால் கொண்டு போய் வளைத்தும் நிறுத்தியிருந்தார். ஏகபாத மூர்த்தி போல ஒரு காலால் நின்று கொண்டு, இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, புதுவிதமான யோகாசன மெல்லாம் செய்து கொண்டிருந்தார். இது அவரது அன்றாட வழக்கம்தான்.

அடிக்கடி மொட்டை மாடிப்பக்கம் வரும் வசந்தனும் அதை எல்லாம் பார்ப்பான்.

"எப்படி சார்... இப்படி எல்லாம் உங்களால செய்ய முடியுது?" என்றும் கேட்பான்.

"சார்னு சொல்லாதே... அது அடிமைன்னு பொருள்தர்ற வெள்ளக்காரன்சொல். ஆசான்னு அழகா தமிழ்ல கூப்பிடு," என்று அவரும் திருத்துவார். இருந்தாலும் அப்படிக் கூப்பிட அவனுக்கு நாக்கு வராது. ஆகையால் ஆசான் என்றும் கூப்பிடாமல் சார் என்றும் கூப்பிடாமல் ஒரு மாதிரி அவரிடம் பேசிசமாளிப்பான்.

ஆனால், எதையும் பேசாமல் எனக்கென்ன என்று மௌனமாக மட்டும் அவன் இருந்ததேயில்லை. அப்படிப் பட்டவனுக்கு இன்று என்ன வந்தது? எது அவனை இப்படி மௌனத்தில் போட்டு புதைத்திருக்கிறது? ஏகாம்பர வாத்யா

ருக்கும் அவனது மௌனம் என்னவோ செய்தது.

ஒரு வழியாக பயிற்சியை முடித்தவர் பக்கத்தில் கிடந்த ஈரத்துணியை எடுத்து, மெல்ல உடம்பெங்கும் ஒத்திவிட்டுக் கொண்டார். பிறகு அந்தத் துணியை விரித்து, மாடி கைப் பிடிச்சுவரின் மேல் போட்டவர்,

''என்ன வசந்தா... என்ன ஆச்சு இன்னிக்கு உனக்கு?'' என்று ஆரம்பித்தார். அவரது குரல் அவனது காதில் விழுந்த மாதிரியாகவே தெரியவில்லை.

''ஏய் வசந்தா... உன்னைத்தான்ப்பா...''

இறுதியாகக் கத்தினார் அவர்.

அவனும் பிரக்ஞை கலைந்ததுபோல அவரைப் பார்த்தான்.

''என்ன ஆச்சு. ஏன் ஒரு மாதிரி இருக்கே..?''

அவனோ பதிலுக்கு வழிசலாய் சிரித்தான்.

இளிக்காதே... விஷயத்தைச் சொல்லு.''

''ஒண்ணுமில்ல சார்.''

''சார்னு கூப்டாதேன்னு சொல்லியிருக்கேன்ல.''

''வாஸ்தவம்தான்.. அதுக்காக ஆசான்னு கூப்பிடறது என்னவோ மாதிரிஇருக்கு.''

''சரி.. அப்ப வாத்யாரேன்னு சாதாரணமா கூப்பிடு.''

''விடுங்க... நான் உங்களை எப்படி கூப்பிடறதுங்கற தெல்லாம் இப்ப எனக்கு முக்கியமில்லை.''

"அப்ப வேற எதுதான் உனக்கு முக்கியம்?"

"அப்படிக் கேளுங்க. எனக்கும் யார்கிட்டையாவது இதைப் பத்தி பேசமாட்டோமான்னுதான் இருக்குது."

"எதைப் பத்திப்பா?"

''வரேன். இப்படி மொட்டை மாடில நின்னு பேசற விஷய மில்ல வாத்யாரே, கீழ திண்ணைக்கு வாங்க சொல்றேன்."

"நீ பீடிகை போடறத பார்த்தா ஏதோ பெருசா இருக்குன் னுதான் தோணுது.''

''ஆமாம்.. இது எப்படி சாத்யம்னே எனக்குத் தெரியல."

''எதுப்பா?"

"கீழ வாங்க சொல்றேன்.''

பதிலோடு வேகமாக கீழே இறங்கத் தொடங்கினான். ஏகாம்பர வாத்தியாரும் புறப்பட்டார்.

***சி***லுசிலுவென்று சிலுசிலுப்பு அப்பிக்கிடக்கிற சிமெண்ட்டு பூசிய வழவழப்பான திண்ணை அது. சற்றுத் தள்ளி வேப்ப மரம். அதன்நிழல் கூட திண்ணை மேல்தான் விழுந்தபடி இருந்தது.

வேப்பநிழலும், காற்றும் மூச்சுக்கு பலம் என்பதாலோ என்னவோ ஏகாம்பர வாத்தியார் வீட்டு முன்னால், இடம் பார்த்து மரத்தை வைத்துவிட்டார். அதுவும் பூதத்தின் தலை போல தழைத்து வளர்ந்துவிட்டது. அந்த மரத்தின் கிளை களில் எல்லாம் காக்காய் குருவி என்று ஒரே பறவைக்

கூட்டம். எப்பொழுது பார் சலசல என்று ஒரே சப்தம் வேறு. அதை ரசித்தபடியே திண்ணையில் படுத்தால், சில நிமிடங்க ளிலேயே தூக்கமானது வந்து அப்படியே அள்ளிக்கொண்டு போகும்.

அப்படி ஒரு திண்னை அது.

அவர் வருவதற்கும் முன்பாக, வசந்தன் வந்து விட்டான். அவரும் தன் தடித்த மீசையை நீவிக்கொண்டு லங்கோடு விலிருந்து வேட்டிக்கு மாறியிருந்தவராக வந்து சேர்ந்தார்.

"சொல்லு. என்ன விஷயம்?"

"ஒண்னுமில்ல வாத்யாரே... இது ஒரு நம்பமுடியாத அதிசயம்."

"சுத்தி வளைக்காம என்னன்னு நேரா சொல்லு."

"நான் காலேஜ்ல படிக்கும்போது மாரிமுத்துன்னு ஒருத்தன் என்கூட படிச்சான்."

"சரி அவனுக்கென்ன?"

"கேளுங்க... அவன் ஒரு சரியான மாங்காமடையன் கன்னங்கரேருன்னு ஆத்தங்கரை கருப்பச்சாமி மாதிரிதான் இருப்பான். நாங்கள்ளாம் பிளாக் மாரின்னுதான் கூப்பிடு வோம்."

"விஷயத்துக்கு வராம பீடிகையா போடறே, எனக்கு பொறுமை போயிடப் போகுது."

"அவசரப்படறீங்களே வாத்யாரே, நான் அவனப்பத்தி

இப்படி எல்லாம் சொல்ல காரணம் இருக்குது."

"என்ன புடலங்கா காரணம்... சுருக்கமா கண்றாவியா இருப்பான்னு சொல்லேன்."

"ஆமாம். அப்படியேதான். நம்ம எதுக்க நின்னு பேசினா வாய் ஒரேடியா நாறும், நாங்கள்ளாம் ஒழுங்கா பல் விளக்க மாட்டியாடா மாரின்னுல்லாம் கேட்போம். கண்ணுலையும் எப்பவும் பீளை அப்பிக்கிடக்கும். அச்சு அசல் கருங்குரங்கு மாதிரியேதான் இருப்பான்."

"சரிப்பா... அவனுக்கென்ன?''

"என்ன வாத்யாரே அப்படி கேட்டுட்டீங்க... இன்னிக்கு அவன் யார் தெரியுமா?"

"யாரு?"

"பிரபல சினிமா நடிகை வந்தனா இருக்கால்ல..''

"எனக்கு வந்தனாவையும் தெரியாது. சந்தனாவையும் தெரி யாது.''

''தெரிஞ்சுக்குங்க. வந்தனாதான் இப்ப நம்பர் ஒன் ஸ்டார். அவள் ஒரு சொடக்கு போட்டா அப்படியே மயங்கி விழ ஒரு கூட்டமே தயாரா இருக்கு வாத்யாரே."

"சரி அவளுக்கும் உன் நண்பன் மாரிமுத்துவுக்கும் என்ன சம்பந்தம்?" -

"வாத்யாரே இவன் குப்பைத் தொட்டின்னா, அவ நிஜமா -லுமே ஆகாயநிலா வாத்யாரே..''

"சரிப்பா... விஷயத்துக்கு வா."

இவ்வளவு சொன்னதுக்கு பிறகும் விஷயத்துக்கு வான்னா நான் என்னத்த பேசறது? ஆமா நீங்க தினத்தந்தி தினமலர் -லாம் படிக்கறது கிடையாதா?"

"எங்கப்பா... அதுக்கெல்லாம் எங்க நேரம் இருக்குது"

"கிழிஞ்சது கிருஷ்ணகிரி. நீங்க அந்த பேப்பர்கள் எல்லாம் பார்த்துருந்தா தெரிஞ்சிருக்கும். இந்த மாரிமுத்துதான் வாத் -யாரே வந்தனாவுக்கு இப்ப புருஷன்."

"சரி... இப்ப அதுக்கென்ன?"

"என்ன வாத்யாரே அப்படி கேட்டுட்டீங்க.. வந்தனா ஒரு உலகப் பேரழகி, கோடீஸ்வரி. இந்த மாரிமுத்துவோ சரியான சோப்ளாங்கி, பி.எஸ்சி-ல கூட இன்னும் நாலு பேப்பர் அரியர்ஸ் வெச்சுருக்கான்."

"அப்ப இப்படி ஒரு கரி வண்டியை அந்தப் பேரழகி எப்படி கல்யாணம் பண்ணிகிட்டாங்கறதுதான் இப்ப உன் குழப்பமா?"

"ஆமாம் சாமி... வந்தனாவுக்கு பெரிய பெரிய மந்திரிங்க எல்லாம் பிராக்கெட் போட்டுப் பார்த்தாங்க, பாச்சா பலிக் கலை, இவன் எப்படி அவகிட்ட சிக்கினான்னுதான் தெரியல."

"இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு, அவளோ நடிகை, ஒரு நடிகையை எந்த நல்ல ஆம்பளையாவது கல்யாணம் பண்ணிக்குவானா? அட அந்த நடிகைதான் ஆகட்டும் எந்த நல்ல ஆம்பிளைக்காவது கட்டுப்பட்டு நடப்பாளா? அவங்க

-ளுக்கெல்லாம் கைக்கடக்கமா உக்காருன்னா உக்காரு, நில்லுன்னா நில்லுங்கற மாதிரியான கேரக்டருங்களதானே பிடிக்கும்."

"இல்லவாத்யாரே... நீங்க சொல்றபடி பார்த்தா, அவளுக்கு மாரிமுத்து கால் அமுக்கி விடணும். ஆனா மாரிமுத்துவோ அவளை அப்படியே விரட்டு விரட்டுன்னு விரட்டறான். இனிமே நீ நடிக்கக்கூடாதுன்னு வேற அவகிட்ட சொல்லிட் -டான். அவளும் சரின்னு சொல்லி, நடிகை வந்தனா சினிமாவுக்கு முழுக்குன்னு இன்னிக்கு பேப்பர்ல மேட்டர் வந்தாச்சு."

வசந்தன் சொன்னது வாத்தியார் ஏகாம்பரத்தைக் கூட கொஞ்சம் போல சிந்திக்க வைத்தது.

"என்ன வாத்யாரே... ஆச்சரியமா இருக்குல்ல?"

"கொஞ்சம் ஆச்சரியமாத்தான் இருக்கு. அதே சமயம் இது ஒண்ணும் பெரிய விஷயமில்லேங்கற மாதிரியும் தோணுது எப்படின்னா. சில பெண்களுக்கு விசித்ரமான ரசனை இருக்கும். இந்த நடிகை அந்த ரகத்தை சேர்ந்தவளா இருப்பா.

இந்த மாரிமுத்துகருப்பா இருந்தாலும் நல்லா வாட்ட சாட்டமா இருப்பானா?"

"ஐய்யோ... மார்பைக் காட்டுனா எலும்பை நீங்க எண்ணி -டலாம். அப்படி இருப்பான்."

"என்ன நீ... என் எல்லா கேள்விக்கும் எதிராவே பதில்

சொல்றே, நான் இப்ப சொல்றேன். நல்லா கேட்டுக்கோ. அவன்கிட்ட நிச்சயமா அந்த வந்தனாவை கட்டிப்போட்ற மாதிரி ஏதாவது ஒரு விஷயம் இருக்கும்.''

"மண்ணாங்கட்டி, வாயைத் திறந்தா கூவம் வாத்யாரே."

"இருக்கலாம்... நீ எதுக்கும் நல்லா யோசிச்சுப் பாரேன்.''

"அதெல்லாம் ஒண்ணுமேயில்லை வாத்யாரே... நானும் கூட்டியும் கழிச்சும் பார்த்துட்டேன். எதுலையுமே அவன் விஷயம் டேலி ஆகமாட்டேங்குது.''

''இல்லப்பா எதாச்சும் இருக்கும்.''

"இல்ல வாத்யாரே... எப்பப்பார் சில மாய மந்திர புத்தகங் -களை வெச்சு படிச்சுகிட்டு இருப்பான். நாங்களும் நீ மந்திர வாதியா வரத்தான் லாயக்குன்னு கலாட்டா பண்ணுவோம்."

"மாய மந்திர புத்தகங்களா? பேர் தெரியுமா?"

"யாருக்குத் தெரியும்... மன்மத ஜாலமோ, மகேந்திர ஜாலமோன்னு வரும்."

வசந்தன் சாதாரணமாகத்தான் சொன்னான். ஆனால் ஏகாம்பர வாத்யார் வாயைப் பிளந்து விட்டார்!

# 2

***வசியம் என்றாலே அது ஒரு மாயக்கலை என்கிறார் போல ஒரு எண்ணம்தான் எல்லோரிடமும் இன்று***

***உள்ளது. உண்மையில் 'வசியம்' என்பது மனிதசக்திக்கு உட்பட்ட ஒரு ஆற்றல்.***

***வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரிடமும் அவர்களது வெற்றிக்கு பின்னால் ஒரு சக்தியாக இருந்திருப்பது வசியமாகத்தான் இருக்க முடியும்.***

***அரசியல்வாதிகள் தங்கள் பேச்சின் வசீகரத்தால்தான் வெற்றி பெறமுடியும். நடிகர்கள் தங்கள் நடிப்பின் வசீகரத்தால்தான் புகழ் பெறமுடியும்.***

***தெருவில் குச்சிமிட்டாய் விற்பவர்கள்கூட ஆடிப்பாடி வசீகரித்தால்தான் விற்பனை நன்கு இருக்கும்.***

***ஒருவரின் தனித்திறன் என்பது பட்டை தீட்டப்படும் பொழுது வசியசக்தியாக மாறுகிறது. பட்டை தீட்டிக் கொள்வது எப்படி என்பதில் தான் சூட்சமம் இருக்கிறது.***

***ஹோ***ட்டல் நவ்ரங்!

காஸ்ட்லியான அந்த ஸ்டார் ஹோட்டலின் ரூஃப் கார்ட-னில் ஒரு கல்யாண ரிசப்ஷன்.

வசந்தனின் கூடப்படித்த ராம்ராஜ் என்பவனுக்கும் தொழில-திபர் ஒருவரின் மகளுக்கும்தான் திருமணம், பெரிய இடத்து திருமணம் என்பதால் டாம்பீகத்துக்கு பஞ்சமில்லை. வசந்தனும் அழைக்கப்பட்டிருந்தான்.

அவன் தகுதிக்கு ஒரு இருநூறு ரூபாயில் ஒரு ஓவியப் படம் ஒன்றை வாங்கி அதை அழகாக பாக் செய்து எடுத்துக் கொண்டு அந்த ரிசப்ஷனுக்கு வந்திருந்தான். அவன் வருகையை ராம்ராஜ் ஒன்றும் ஒரு பெரிய சந்தோஷத்திற்

குரிய விஷயமாகவே கருதவில்லை. எல்லோரையும் தன் மனைவியிடம் அறிமுகம் செய்து வைத்தவன், வசந்தன் பிரசன்டேஷனைத் தந்து வாழ்த்துச் சொன்னபோது ஒரு சம்பிரதாயச் சிரிப்போடு முடித்துக் கொண்டான். இருந்து சாப்ட்டுதான் போகணும். என்று எல்லோருக்கும் சொன் னதைக் கூட அவனிடம் சொல்லவில்லை.

வசந்தனுக்கு வலித்தது.

ராம்ராஜின் கல்யாண அழைப்பை பெரிதாக கருதி வந்தது தப்பு என்றும் தோன்றியது. அலட்சியப்படுத்துவதற்காகவே அவன் அழைத்தது போல் தோன்றியது. ஸ்டேட்டஸ் பார்க் -கிறான் என்பதும் தெரிந்தது. மனது புழுங்க ஆரம்பித்து விட்டாலே மற்ற விஷயங்களில் நாட்டம் இருக்காது.

பிரசன்டேஷனுக்காக செலவழித்த இருநூறு ரூபாயும் தெண்டம் என்று தோன்றியது.

ஆளுக்கு ஆள் கூல்ட்ரிங்க்ஸ், ஹாட் ட்ரிங்க்ஸ் என்று முழுங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆர்க்கெஸ்ட்ரா குரூப் ஒன்று யார் கேட்கிறார்கள். கேட்க வில்லை என்பதைப் பற்றிய கவலையே இன்றி பாட்டுப்பாடி ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தது. இப்பொழுது ஆர்க் கெஸ்ட்ரா என்றாலே நடிகர்கள் குரலில் மிமிக்ரி செய்வது என்பது ஒரு சடங்காகிவிட்டது. ஒரே வசனத்தை ஒவ்வொரு நடிகரும் எப்படிப் பேசுவார்கள் என்று பேசிக்காட்டி கைத் தட்டல் வாங்க ஒருவன் முன் வந்திருந்தான்.

வசந்தனுக்கு எரிச்சலாக வந்தது. அப்படியே நழுவி விடுவது நல்லது என்று தோன்றியது. நழுவ காலெடுத்தான். கச்சிதமாக தோளின்மேல் ஒரு கை விழுந்தது. யார் என்று பார்த்தான். பிரபாகர்! அவனது இன்னொரு நண்பன்.

''ஹாய்...''

"என்னடா.. கிளம்பிட்டியா?"

"ஆமாண்டா.. வேலை இருக்கு."

''வேலை இருக்கா. வெறுப்பா இருக்கா?''

பிரபாகர் புள்ளி வைத்தான். விட்டால் கோலம் போடுவான் போலத் தோன்றியது. வசந்தன் மௌனத்தில் அதற்கு இசை -வைத் தந்தான்.

"புரியுது... ராம்ராஜ் சரியா உன்னை ரிசீவ் பண்ணலன்னு ஃபீல் பண்றே.... சரிதானே?"

"ஆமாண்டா... யாரோ வேண்டாதவங்க வந்தா பார்ப் போமே... அப்படிப் பாக்கறான்."

"கவனிச்சேன். நானும் உன் கேஸ்தான்."

"அப்ப கிளம்பு, இனியும் இங்க இருக்கறது மரியாதை இல்லை."

"போடா.. ஃபூல். ஐநூறு ரூபாய்க்கு நான் பிரசன்ட் பண்ணியிருக்கேன். அதுக்கு ஈக்விலா இங்க டின்னரை ஒரு பிடிபிடிச்சுட்டு அப்படியே ஒரு ஃபுல் அடிச்சாதான் காம்பன் சேட் ஆகும்."

"சாரிடா... இப்படி கணக்கு பார்க்க நான் தயாரில்ல. போய்ட்டு போகுது போ! அன்பும் நட்புமே இல்லாதப்ப கிஃப்டுக்கு போய் மதிப்பு கொடுத்துகிட்டு."

''தப்பா யோசிக்கறே... நாம போறதால அவனுக்கு ஒரு நஷ்டமும் இல்லை.. நம்ம நஷ்டமும் லாபமா மாறப் போற -தில்ல. நமக்கு மனப்புழுக்கம் ஏற்பட்டதுதான் மிச்சம், ஸோ... நம்மை இன்சல்ட் பண்ணாம பண்ணின அவனை கொஞ்சம் போல பதற வைக்கணும்.''

"சாரி... எனக்கு அதுக்கு சக்தியில்லை. நான் புழுங்க ஆரம்பிச்சுட்டா என்னால நார்மலா இருக்க முடியாது. நான் கிளம்பறேன்.''

வசந்தன் பேச்சோடு சில அடிகள்தான் போட்டிருப்பான். எதிரில் திபுதிபு என்று ஒரு கூட்டம். அந்த ரிசப்ஷன் ஹாலிலும் ஒரே பரபரப்பு.

எல்லோரும் முண்டியடித்துக்கொண்டு மெயின் வாசலைப் பார்க்க நடிகை வந்தனாவோடு உள்ளே நுழைந்து கொண்டி -ருந்தான் மாரிமுத்து!

'இது எப்படி நடக்கலாம்? இது எப்படி சாத்யம்?' என்று வசந்தனை புழுங்கவிட்ட அதே மாரிமுத்துதான்.

வசந்தனுக்கு அவனை அங்கு பார்க்கவும் கொஞ்சம் சுருக் -கென்றது.

இந்த நண்பனின் திருமணத்துக்கு அவன் வருவான் என்று துளிகூட வசந்தன் எதிர்பார்க்கவேயில்லை.

அவ்வளவு கூட்டத்திலும் மாரிமுத்து வசந்தனை பார்த்து விட்டு ''டேய் வசந்தா..'' என்று உரக்கக் குரல் கொடுத்தான். இது வசந்தனுக்கு அடுத்த ஆச்சரியமாகியது.

விறுவிறுவென்று நடந்து வந்தவன், வசந்தனின் தோளைப் பற்றி, ''எப்படி இருக்கே?'' என்றான்.

''நல்லாருக்கேன். நீஎப்படி இருக்கே?''

''எனக்கென்னடா... ஃபைன். ஆங் வந்தனா, இவன் என் குளோஸ் ஃப்ரெண்ட் வசந்தன். காலேஜ்ல நான், ராம்ராஜ் இவன்லாம் ஒரே செட்...''

ராம்ராஜ் செய்யத் தவறியதை மாரிமுத்து செய்யவும் வசந்தனுக்கு அவன் மனநிலையே மாறிப்போனது. பிறகுதான் மாரிமுத்துவும் ராமராஜை நெருங்கிச்சென்று வாழ்த்துக் களைச் சொல்லி பிரசன்டேஷனையும் தந்தான்.

''டேய் இரு.. உன்கூட நிறைய பேசணும்.'' என்று ராம்ராஜ் அருகில் நின்றபடி, போட்டோவுக்கு போஸ் கொடுக்கும் போதும் குரல் கொடுத்தான். பிறகு, நீயும் வாடா.. எங்க நம்ம ஃப்ரெண்ட்ஸ் எல்லாம்.'' என்று பார்த்துப் பார்த்து எல்லோ ரையும் அழைத்து வந்தனாவை நடு நாயகமாக நிறுத்தி புகைப்படம் எடுத்துக்கொண்டான். எல்லோர் பார்வையும் அவள் மேல்தான் இருந்தது. அவளும் மொழு மொழு வென்று மெழுகுப் பொம்மையாட்டம் இருந்தாள்.

மேக்கப் அழகா, இல்லை.. இயற்கையாகவே அழகியா என்கிற சந்தேகமெல்லாம் வந்து போனது. சிம்பிளாய் டிரெஸ்

செய்திருந்தாள். முழங்கைவரை கைவைத்த ரவிக்கையும், சருகு போன்ற சேலையும் உடுத்தி கொஞ்சம் ட்ரான்ஸ் ஃபரன்சியோடு உட்பாகங்களை காட்டினாள்."

அவைகளில் எங்கும் கூடுதலாய் ஒரு மில்லிகிராம் சதை இல்லை. மார்பிரண்டும் பெரிதுமில்லை, சிறிதுமில்லை என் கிற மாதிரி இருந்தது. ஏதோ ஒரு படத்தில் அது பெரிதாக இருந்து மிகக் கவர்ந்த ஞாபகம் எல்லாம் வசந்தனுக்குள் வந்து வந்து போனது.

தலை முடியும் நல்ல நீளத்தில் மிக துப்புரவாக ஒன்றோ டொன்று ஒட்டாமல், கரும்பட்டு நூலைப் போலிருந்தது. தலைமுடியை இப்படி எல்லாம்கூட பராமரிக்க முடியுமா என்றும் தோன்றியது.

மாரிமுத்துவோ நேர்எதிராய் இருந்தான். கருத்த உடம்பு, சிகரெட் பிடித்து காய்த்துப்போன உதடு. கொஞ்சம் பிதுங் கியது போன்ற நெற்றி. இடுப்புக்கு மேல் சீராகவும், அதற்கு கீழே மட்டும் சரியாக வளராமலும் போய்விட்டது போல ஒரு வித்தியாசமான உயரம்!

வசந்தனுக்கு அவர்களது ஜோடிப் பொருத்தம் மீண்டும் ஒரு பெரிய ஆச்சரிய விஷயமாகி அலை மோதத் தொடங் கியது.

அவனே கறுப்பு! நெற்றியில் கொஞ்சம் போல மையும் செந்தூரமும் இட்டிருந்தான். அதில்தான் ஏதோ விஷயம் இருக்கவேண்டும் என்று தோன்றியது.

கொஞ்சம் பரபரப்பு குறைந்து கையில் ஒரு கூல்ட்ரிங் பாட்டிலோடு மாரிமுத்துவும் வசந்தனிடம் வந்தான்.

"என்னடா வசந்த்... நீ எப்ப கல்யாணப் பத்திரிகை தரப் போறே?"

"எங்கடா, இரண்டு அக்காங்க இருக்காங்க. அவங்க கரை ஏறணும்."

அதுக்காக வயசெல்லாம் போய், தாத்தா ஆனபிறகு கல்யாணம் பண்ணிக்க போறியா?"

"என்னை விடு... உன்கிட்ட ஒண்ணு கேட்கணும்."

"தெரியும். நீ என்ன கேட்கப் போறேன்னு நல்லா தெரியும், நீ ஏண்டா உன் கல்யாணத்துக்கு யாரையும் கூப்பிடலைன்னு தானே கேக்கப்போறே?"

"ஆமாம்... அதேசமயம் எப்படிடா... எப்படிடா.." வந்தனா எப்படி சம்மதித்தாள் என்று கேட்க ஆசைப்பட்டு, அது முடி யாமல் நாக்குக்குள்ளேயே அடங்கிப் போனது அந்த கேள்வி.

"என்ன கேக்க வரேன்னு நல்லா தெரியுது. வந்தனா ஒரு பெரிய ஸ்டார். அவளை எப்படி நான் கல்யாணம் பண்ணி கிட்டேன்னுதானே?"

அவன் தலை ஆமாம் என்றும், இல்லை என்றும் இருவிதமாக ஆடியது. அவளைச் சுற்றியோ ஒரு பெரிய கூட்டம்.

"இந்த கேள்வியை நீ மட்டுமில்லடா. எல்லாரும் கேட்டுட்

டாங்க. எனக்கே அதை நினைச்சா ஒரே ஆச்சரியமாதான் இருக்கு. எல்லாம் குமாரசாமி சித்தரோட அருள்னுதான் சொல்லணும்."

"குமாரசாமி சித்தரா... யார் அவர்?"

"உனக்கு தெரியாது.. நீ கேள்விப்பட்டதில்ல?"

"இல்லையே..."

"சரிதான் பெரிய மகான்டா அவர். வந்தனாவும் அவரோட டெவோட்டி. பரமபக்தைன்னுகூட சொல்லலாம். அவர்தான் வந்தனாகிட்ட உனக்கு ஏற்ற ஜோடி மாரிமுத்துதான்னு சொல் லியிருக்கார் எனக்கே இது அப்புறம்தான் தெரியும்."

"அப்படியா... ஆமாம் அவர் எங்க இருக்காரு?"

"பெரியபாளையத்துக்கு பக்கத்துல ஒரு கிராமத்துல."

"என்னால நம்பவே முடியல. நான் என்ன நினைச்சேன் தெரியுமா?"

"என்ன, வந்தனாவை நான் ஏதோ தில்லுமுல்லு பண்ணி மடக்கிட்டதா நினைச்சியா?"

"அது... அது..."

"சும்மா சொல்லு.."

"ஆமாண்டா... நீ கூட எப்பப்பார் இந்த மாயமந்திர புத்தகங்களையா, படிச்சுகிட்டு இருப்பியா. சரிதான் அதை வெச்சுதான் ஏதோ வேலைகாட்டிட்டேன்னு நினைச்சேன்."

அந்த பதிலைக்கேட்டு மாரிமுத்து வாய்விட்டு சிரித்தான்.

துளிகூட அதற்காக அவன் வருத்தப்பட்ட மாதிரியோ, கோபப்பட்ட மாதிரியோ தெரியவில்லை. வசந்தனுக்கும் அந்த சிரிப்பு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

"ஒரு வகைல உன்னை நான் பாராட்றேண்டா. நீ என்ன நினைச்சியோ அதை அப்படியே சொல்லிட்டே பாரு அதுக் -காக. ஆனா ஒரு விஷயம் வசந்தன், எந்த புத்தகத்தைப் படிச்சும் மாய மந்திரங்களை எல்லாம் நாம புரிஞ்சுக்கவோ, தெரிஞ்சுக்கவோ முடியாதுங்கறதுதான் உண்மை!அதெல்லாம் ஒருவித தப்பான இண்ட்ரஸ்ட்டுன்னுதான் சொல்வேன்."

மாரிமுத்து சொல்லச் சொல்ல வசந்தனுக்கு ஆச்சரியம் அதிகமாகிக் கொண்டே போனது. அதே சமயம் அவன் வெளிப்படையாக எந்த ஒளிவுமறைவுமில்லாமல் பேசுகிற மாதிரிதான் இருந்தது.

"என்ன பாக்கறே... நான் சொல்றத உன்னால நம்ப முடியலியா?''

"ஆமாண்டா... வாழ்க்கைல சிலநேரங்கள்ள சில விஷயங் களை சுத்தமா ஒரு சதவிகிதம்கூட புரிஞ்சுக்க முடியற தில்ல.''

"நீ குமாரசாமி சித்தரை போய்ப்பாரு. உனக்கு வாழ்க்கைல எல்லாமே ஒவ்வொண்ணா புரியும்."

''ஆமா உனக்கு அவர் எப்படி பரிச்சயமானாரு."

"அதான் பூர்வஜென்ம புண்ணியம்கறது."

"அப்ப அவரைப் பார்க்க புண்ணியம் செய்துருக்கணும்னு

சொல்றியா?''

''நிச்சயமா.. அவரைன்னு மட்டுமில்ல வசந்தன். எந்த ஒரு சாமியாரை பார்க்கவும் நாம புண்ணியம் செய்துருக்கணும்."

அவன் பதில் வசந்தனை ஒரு மாதிரி கண்களை உருட்டச் செய்தது.

''எதுக்கு கண்ணை அப்படி உருட்டிபாக்கறே?''

"சத்யமா சொல்றேன். நீ இப்படி எல்லாம் பேசுவேன்னு நான் எதிர்பார்க்கவேயில்லை. முதல்ல நீ என்னை எல்லாம் மதிச்சு பேசுவேன்னே நினைக்கல. அடுத்து அப்படியே பேசி னாலும், உன் பேச்சுல அலட்டல் கொடி கட்டிப்பறக்கும் னுதான் நினைச்சேன். நீயோ தோற்றத்துக்கும், பேச்சுக்கும் சம்மந்தமே இல்லாத மாதிரி தத்துவமா பேசறியே... இத என்னன்னு சொல்றது?"

"என்னன்னு சொல்றது.. எப்பவும் எல்லாரையும் ஒரே மாதிரி பார்க்கக் கூடாதுன்னுதான் சொல்லணும். அதோட உனக்கு யாரையும் சரியா எடைபோடத் தெரியலே. உனக்கு அந்த பக்குவம் வரலேன்னுதான் சொல்லணும்." மாரிமுத்து தன் பேச்சில் வசந்தனை செல்லமாக கண்டித்தான்.

"என்னங்க. "அவன் மனைவி நடிகை வந்தாவின் குரல் இடையில் அவனை அழைத்தது.

"என்னடா..?"அவனும் செல்லமாய் எதிர்கொண்டான்.

"நேரமாச்சு கிளம்பலாமா? எனக்கு ஒன்பது, முப்பதுக்கு ஃப்ளைட்."

"அட ஆமால்ல... சாரி வசந்தன். வந்தனா ஒரு ஷூட்டிங் குக்காக குலுமணாளி போறா, என்னையும் கூட கூப்பிட்றா. ஒன்பது முப்பதுக்கு ஃப்ளைட். அப்ப நான் கிளம்பறேன்."

அவன் கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டான்.

வசந்தனுக்கு எல்லாமே கனவு போல இருந்தது. அதுவரை அங்கும் இங்குமாய் நின்று பேசிக் கொண்டிருந்த பிரபாகர் மெல்ல அவனருகே வந்து சேர்ந்தான்.

"என்னடா... அப்பவே கிளம்பறேன்னே. மாரிமுத்து வந்த னாவோட வரவும் உன் கோபம் எரிச்சலெல்லாம் மாறிப் போச்சா?"

"ஆமாண்டா. மாரிமுத்து நம்பமுடியாதபடி மாறிட்டாண்டா. அவன் பேசினத கேட்டியா நீ.."

"உம் உம்... காதுல விழுந்திச்சு. சித்தரு, சாமியாருன்னு பூ சுத்திகிட்டிருந்தான் நீயும் மகுடிநாகம் மாதிரி தலைய ஆட்டிகிட்டு நின்னுகிட்டிருந்தே."

"இல்லடா... அவன் சொல்றதுலயும் ஏதோ கொஞ்சம் உண்மை இருக்கற மாதிரிதான் தெரியுது"

"போடா புடலங்கா... ஒரு நடிகையை மனசு ஒப்பி கல்யாணம் பண்ணிகிட்டேன்னு சொன்னா, எல்லாரும் கேலி செய்வாங்கன்னு அவன் சாமியார் சொன்னாரு, சித்தர் சொன்னாருன்னு கதை உட்டா, அதை நீ நம்பிட்டியா?"

"அப்படின்னா...?"

"வந்தனா மாதிரி சில நடிகைங்களுக்கு கைக்கடக்கமான புருஷனுங்கதான் தேவை. அதுலையும் இவனை மாதிரி குட்டை குட்டையா விகாரமா இருக்கறவங்கன்னா என்ன சொன்னாலும் கேட்பாங்க... இதெல்லாம் உனக்கு புரியாதுடா..."

பிரபாகர் வேறு ஒரு கோணம் காட்டினான்.

வசந்தனுக்கு குழம்பியது.

உண்மை இதில் எங்கே இருக்கிறது?

# 3

*வசீகரம் என்பது அழகு சார்ந்த ஒன்று. அழகுணர்வோ ஆளுக்கு ஆள் மாறுபடும். ஒருவருக்கு மிக அழகாக தெரியும் ஒரு விஷயம், இன்னொருவருக்கு சுமாராகத்தான் தெரியும்.*

*எல்லோரும் ஒப்புக்கொண்டு மயங்குகிற அழகை 'தேஜஸ்' என்பார்கள்.*

*தேஜஸ் என்பது பிறக்கும்போதே நம்முடன் பிறந்து வருகிற ஒன்று கிடையாது. அழகு சாதனங்களாலும் அதை அடைய முடியாது.*

*தேஜஸ் என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மறைந்திருக்கும் ஒரு காந்த ஒளி ஆகும். இது வெளிப்பட மனமானது அலைபாயாமல் இருக்க வேண்டும். மனதை எண்ணங்களே இல்லாமல் அடக்கி கட்டுப் படுத்தத்தான்*

யோகம் தியானம் முதலியவைகளை பழகுகிறோம்.

மனதை தளும்பிக் கொண்டேயிருக்கும் ஒரு நீர் நிலையோடு ஒப்பிடலாம். அப்படி ஒரு நீர்நிலையில் தெளிவாக எதையும் பார்க்க முடியாது, ஒரு சிறு அசைவுமில்லாதபடி நீர்ப்பரப்பு இருக்கும்போது அதில் நாம் எட்டிப் பார்த்தால் நம்முகம் கண்ணாடியில் பார்க்கிற மாதிரி மிகத் தெளிவாகத் தெரியும்.

நம் மனது இதுபோல் எந்த எண்ணங்களும் இன்றி அலைபாயாத் தன்மையுடன் இருக்கும்போது, மனதை ஆட்டிப் படைத்த சக்தி கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உடம்பின் புறத்தில் பீறிட்டுச் செல்ல முயலும். அப்போது நமது தோலின் நிறம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அது பொன்னைப்போல ஒளிரும். குறிப்பாக முகமும், கண்களும் ஒருவித ஒளி வந்து ஒட்டிக் கொண்டு மின்னுகிற மாதிரி மின்னும் இதைத்தான் 'தேஜஸ்'என்கிறோம்.

இதற்கு முகத்தில் விபூதி, திருமண், குங்குமம் முதலியவை தரிக்கும் பழக்கங்களும் துணை செய்யும். நமது நெற்றியில் புருவ மையத்தில்தான் ஆக்கினை என்னும் சுடர் இருக்கிறது. இந்த சுடர் தீச்சுடர் போன்றதன்று, இது ஒருவித மிதமான வெப்பம். இதனால் அந்த பாகத்தில் ஒருவித கொழுப்பு கரைந்து திரவமாய் பரவியிருக்கும். இது ஞானதிருஷ்டிக்கு எதிரானது. பளிச்சென்ற கண்ணா டியில் எண்ணெயைப் பூசினால் எப்படி இருக்கும். அப்படி இருக்கும் நாம் தரிக்கும் திலகங்கள். நீரில் குழைத்து பூசப் படுவதாலும், அவை உறிஞ்சும் தன்மை படைத்ததாலும் அந்த குணத்தால் புருவ ஆக்கினைக் கொழுப்பு என்னும் துர்நீர் உறிஞ்சப்பட்டு ஆவியாகிவிடும். இது ஒருநாள் ஒருமுறை திலகம் இட்டுக் கொள்வதால் நிகழ்வதில்லை.

*வழக்கமான செயல்பாடாய் இருக்க வேண்டும்.*

*மஞ்சள் குங்குமத்துடன் திகழும் பல சுமங்கலிப் பெண்கள் முகம் பளிச்சென்று இருக்க இதுவே காரணம். இப்படி தியானம், திலகம் இரண்டிலும் தவறாமல் இருப்பவர்கள் முகத்தில் புத்தொளி புரளும், அதுதான் 'தேஜஸ்'.*

*'தேஜஸ்' வசியத்தின் முதன்படி!*

**ஆ**பீசில் வேலை நெட்டிமுறித்தது. கரண்ட் போய் விட்டதால் ஏ.சி வேலை செய்யவில்லை. புழுக்கமோ உடம்பில் வியர்வையை உறிஞ்சித்துப்பிக் கொண்டிருந்தது. வசந்தனால் முடியவில்லை. சட்டை பட்டன்களை பிரித்துவிட்டுக் கொண்டான். மார்பின் மேல் ஊதிவிட்டுப் பார்த்தான். அந்த நொடிப் பொழுதுக்கு சுகமாக இருந்தது.

நிமிர்ந்தான்.

எதிர் சீட்டில் இருந்த அக்கவுண்டண்ட் அமிர்தலிங்கத்துக்கு நல்ல பளபளப்பான வழுக்கைத்தலை, அதில் கூட முத்துமுத்தாய் வியர்த்திருந்தது.

ஸ்டெனோ ஸ்டெல்லாவுக்கு கைக்கச்சப் பகுதி வியர்த்து ஈரத்தால் ஆன ஒரு மேப் பகுதியையே உருவாக்கியிருந்தது.

திடும்மென்று மேனேஜர் தன் அறையைத் திறந்துகொண்டு வெளியில் வந்தார். எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தார். அவர் ஒன்றும் வியர்வையில் சிக்கிய மாதிரி தெரியவில்லை. அவர் அறைக்கு மட்டும் கரண்ட் போனால் போர்ட்டபிள் ஜெனரேட்டர் இருக்கிறது. அவர் அறையில் விளக்கு எரிந்து

கொண்டிருந்தது. ஏ.சிக்கு பதிலாக மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது.

"கரண்ட் கட் ஆனா வேலை பார்க்கக் கூடாதுன்னு சட்டமா..?''

எடுத்த எடுப்பில் அவர் அப்படி கேட்பார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் விழித்தார்கள்.

''என்ன அமிர்தலிங்கம். உங்களத்தான்."

''இல்லையே சார்.. வேலபார்த்துகிட்டுதானே இருக்கோம்.''

"அங்க உள்ள இருந்து கண்ணாடி வழியா பார்த்துகிட்டு தான் இருந்தேன். உங்களுக்கெல்லாம் விசிறிவிட்டுக் கறதுக்கே நேரம் சரியா இருக்குதே."

"அது வந்து சார்... ஃபேன்கூட இல்லாததால் ஒரே புழுக்கமா இருக்கு சார்.''

நீங்க வேலைக்கு சேரும்போது ஃபேன்கூட கிடையாது தெரியும்தானே?"

"என்ன சார் நீங்க... அந்த காலமும் இந்த காலமும் ஒண்ணா என்ன?''

"என்ன ஆயிடிச்சு இந்த காலத்துல. ராத்திரியில வர்ற நிலா பகல்ல வர ஆரம்பிச்சிடிச்சா, இல்லை சூரியன்தான் லேட்டா உதிக்கறானா? காலம் எல்லா காலத்துலையும் ஒரே மாதிரிதான்யா இருக்கு. உங்களமாதிரி ஆளுங்கதான் அது மாறிடிச்சு, இது மாறிடிச்சுன்னு கதை பேசிகிட்டு வேலையும்

ஒழுங்கா பார்க்கறதில்ல."

மேனேஜருக்கு என்ன மூடோ... ஒரு பிடிபிடித்துவிட்டு திரும்பி தன் அறைக்குள் நுழைந்தார். அமிர்தலிங்கம் ஒரு சீனியர் எம்ப்ளாயி அடுத்த வருடம் ரிடையர் ஆகப் போகிறவர், மேனேஜரோ போன மாதம் புதிதாக வந்து சேர்ந்தவர், மதிப்பு தெரியாமல் பேசிவிட்டதாகத்தான் எல்லோரும் நினைத்தார்கள்.

''நல்லா ஃபேனுக்கு கீழ உக்காந்து நோகாம நோம்பு கொண்டாட்றவன். இவன், என்ன பேச்சு பேசறான் பாரு நாயி..''

ஒரு கமெண்ட் வெகுவேகமாக உதிர்ந்தது.

"எல்லாம் வி.ஆர்.எஸ். படுத்தறபாடு." இது அடுத்த கமெண்ட்.

"வி.ஆர்.எஸ்ஸா?''

"ஆமாய்யா. வாலன்டியர் ரிசைன்மெண்ட் ஸ்கீம். புரியலை, விருப்ப ஓய்வு பெறும் திட்டம்.''

''அதுக்கும் இவருக்கும் என்ன சம்மந்தம்?''

"புடலங்கா. நம்ம ஆபீஸ் ஸ்ட்ரெங்த் முன்னூத்தி பத்து. இருநூறுபேர்தான் இருக்கலாம்னு டாப் மேனேஜ்மென்ட்ல முடிவு கட்டிட்டாங்க. கூடுதலா நூத்திப்பத்துபேர் இருக்காங்க. அவங்கள வீட்டுக்கு அனுப்பணும். போன்னா போவாங்களா? இப்படி ஒண்ணும் இல்லாததுக்கெல்லாம் டார்ச்சர் பண்ணா, மனசு வெறுத்துப் போய் உன் வேலையும் வேண்டாம்,

ஒண்ணும் வேண்டாம்னுட்டு போய்டுவாங்கல்ல? அதுலயும் அமிர்தலிங்கம் மாதிரி ஒரு வருஷம் இரண்டு வருஷம் சர்வீஸ்ல இருக்கறவங்க, போடா நீயும் உன் வேலையும்னு வேகமாவே சொல்லிடுவாங்க. இல்லையா?"

அந்த இடத்தில் சீட்டுக்கு சீட் இப்படித்தான் பேச்சுக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

அமிர்தலிங்கம் எதுவும் பேசாமல் ஃபைலைத் திறந்து கொண்டு வேலையில் கவனமாக இருந்தார். வேர்வை கையின் புறங்கை வழியாக ஓடி காகிதத்தில் பட்டு பிசுபிசு வென்று ஒட்டியது. கர்ச்சிப்பை எடுத்து துடைத்து விட்டுக் கொண்டார்.

"என்ன அமர்தலிங்கம் சார்... என்ன எதுவும் பேசமாட் டேங்கறிங்க?" ஒருவன் அவரை வம்புக்கு இழுத்தான். வசந்தன் பார்த்துக் கொண்டே இருந்தான்.

அவரோ நிமிர்ந்து பார்த்து விரக்தியில் சிரிப்பவர்கள் மாதிரி ஒரு சிரிப்பு சிரித்தார்.

"அடேங்கப்பா... இது என்ன சிரிப்புன்னு இப்படி சிரிக் கறீங்க?"

"சிரிக்காம... அந்த ஆள் எதிர்க்க தைரியமா பேசினா லாவது பரவாயில்ல... அவர் போன பிறகு பின்னால பேசறீங் களேப்பா."

"அப்ப எதுவும் பேசாம அவன் ஆட்டி வைக்கற மாதிரி ஆடுடாங்கறீங்களா?"

"உங்களை நான் அப்படி சொல்வேனா. எனக்கு வேற வழி இல்ல. இன்னும் இரண்டு வருஷம் கூடுதல் சர்வீஸ் தந்தா கூட என் கஷ்டம் தீராது. காலேஜ்ல படிக்கற பொண்ணு ஒருத்தி, கல்யாண வயசை தாண்டியும் கல்யாணமாகாத பொண்ணு ஒருத்தி நான் கோவிச்சா கதையாகுமா?"

அவர் பதில் சொல்லி முடிக்கும் முன் மேனேஜர் அறைக் கதவு காத்திருந்த மாதிரிதிறந்தது. திரும்பவும் மேனேஜர்.

முகத்தில் கோபாக்னி.

"ஏய்யா… உங்களுக்கெல்லாம் அறிவில்ல… இப்பதானே பேசாம வேலையைப் பாருங்கன்னு சொன்னேன். மிஸ்டர் அமிர்தலிங்கம். நீங்கல்லாம் ஒரு சீனியர் எம்ப்ளாயியாய்யா. யாராவது ஓ.பி அடிச்சாலும் நீங்க தடுக்கணும், அதை விட்டுட்டு நீங்களும் அவங்களுக்கு சரியா பேசிகிட்டு."

அலறினார் மேனேஜர்.

"இல்ல சார் நீங்க தப்பா புரிஞ்சுகிட்டீங்க. நான் உண்மைல என்ன சொல்ல வந்தேன்னா…"

"வாயமூடுய்யா, இன்னியில இருந்து எம்.டியோட டாட்டர் நந்தினிதான் சார்ஜ் எடுத்துக்கப் போறாங்க. ரொம்ப ஸ்ட்ரிக்டான கேரக்டர் அவங்க. உங்கள அவங்க முன்னால கொண்டு போய் நிறுத்தறேன். அப்பதான் நீங்க வழிக்கு வருவீங்க."

மேனேஜர் ஒரு புது அஸ்திரத்தை வேறு போட்டார். அது நன்றாகவே வேலை செய்தது.

அமிர்தலிங்கத்துக்கு அழுகையே வந்துவிட்டது. மேனேஜரும், கத்தி முடித்துவிட்டு, திரும்ப அறைக்குள் புகுந்து கொண்டார். அமிர்தலிங்கம் பார்வை எல்லோரையும் ஒரு முறை முறைத்தது. வசந்தனுக்கு அவரைப்பார்க்க மிக மிக பரிதாபமாக இருந்தது.

எழுந்து போய் ஆறுதல் சொல்லக்கூட முயன்றான். இருந் தாலும் வேலை நேரத்தில் சீட்டை விட்டு எழுந்து போனதாக ஒரு குற்றச்சாட்டு உருவாகுமே என்று அடக்கிக் கொண் டான்.

ஒரு மணிநேரம் அப்படியே புழுக்கத்தோடு ஓடியது.. கரண்ட் வரவேயில்லை. சூரப்புலிகளாக கமெண்ட் அடித்த ஒருவர்கூட மேனேஜர் நந்தினி பற்றி சொன்னபிறகு வாயைத் திறக்கவில்லை.

ஏற்கனவே நந்தினி பற்றி பலவிதமான பேச்சுக்கள். அவள் உருவத்தில்தான் பெண், மற்றபடி எல்லா விதத்திலும் ஆண் பிள்ளை போலத்தான் நடந்து கொள்வாள் என்று யாரோ சொன்னதாக ஞாபகம்.

அதிகாலை வேளையில் பெசன்ட் நகர் பீச் பக்கம் போனால் ஹார்ஸ் ரைடிங்கில் அவள் ஈடுபட்டிருப்பதைப் பார்க்கலாமாம். சோழவரம் கார் பந்தயங்களிலும் கலந்து கொள்பவளாம்.

பார்க்க ஆள் அழகாக இருந்தாலும் செயல்பாடுகள் நேர் எதிர். குறிப்பாக ஆண்கள் என்றாலே அவளுக்கு அடிமை களைப் போல, என்றெல்லாம் அவள் பற்றி கேள்விப்

பட்டிருந்த விஷயங்கள் நியாயமான புழுக்கத்தைக்கூட வெளிக்காட்டிக் கொள்ளக்கூடாதபடி அவர்களை கட்டிப் போட்டு விட்டது. வசந்தனும் அந்த ஆபீசுக்கு புதியவன்.

புரபேஷன் பீரியடில் இருக்கிறான். வேலைக்கு போய் வந்து கொண்டிருப்பவர்களுக்கு தெரியும், புரபேஷன் என்பது ஒரு தீமிதிக்கிற மாதிரியான கடுமையான சடங்கு என்று. லீவு போடக்கூடாது. பர்மிஷன் போடக்கூடாது. எட்டு மணிநேரம் என்று அளந்து வைத்துக் கொண்டு வேலை பார்க்கக்கடாது. யாரிடமும் எந்த கெட்டப் பெயரும் எடுத்து விடக்கூடாது என்று எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. இதில் ஒன்றில் சிக்கினாலும் கன்ஃபர்ம் செய்ய மாட்டார்கள். கன்ஃபர்ம் ஆனால்தான் சம்பளம் நல்லபடி கிடைக்கும். இல் லாதவரை கன்சாலிடேட்டட் பேமெண்ட்தான். வசந்தனுக்கும் அதை எல்லாம் நினைத்து பயமாகவும், பதட்டமாகவும்கூட இருந்தது. பிசுபிசுவென்று வியர்வைப் புழுக்கத்துக்கு நடு விலும் எப்படியோ சிரமப்பட்டுக் கொண்டு தன் எதிரில் இருந்த கம்ப்யூட்டர் திரையை துடைத்தான்.

கரெண்ட் இல்லாத சமயங்களில் துப்புரவுப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்பது அலுவலகக் கோட்பாடு, மேஜை டிராயரை ஒழிக்கலாம். அநாவசிய பேப்பர் குப்பைகளை அகற்றலாம். இப்படி எவ்வளவோ செய்யலாம். வசந்தனும் அதைத்தான் செய்து கொண்டிருந்தான்.

ஒரு மேஜையில் டிராயர் சிக்கிக் கொண்டிருந்தது. எவ் வளவு இழுத்தும் அது வரவில்லை. கயிற்றைக் கட்டி நாலு

பேர் சேர்ந்து இழுத்தால்தான் அதை வெளியே இழுக்க முடியும் போல தோன்றியது. இருந்தும் முழு பலத்தையும் பிரயோகித்து டிராயரை இழுத்தான். அதுவும் ஆரம்பத்தில் ஆட்டம் காட்டிவிட்டு பிறகு அவனை பின்னே தள்ளியபடி விடுபட்டது. அப்படியே பின்னால் போய் விழுந்தவன் கையில் பிடித்திருந்த டிராயரையும் நழுவ விட்டான். அது ஏதோ சினிமாவில் ஸ்லோமோஷனில் பறந்துசெல்லும் ஒரு பொருள் போல பறந்து சென்று கச்சிதமாக வெளியே காரை விட்டு இறங்கி உள்ளே நுழைந்து கொண்டிருந்த நந்தினியின் தலைமேல் விழுந்தது.

அவளும் அப்படியே தலையில் கை வைத்துக் கொண்டு தரையில் அமர்ந்துவிட்டாள்.

"யூ ஸ்கௌன்ட்ரல். இடியட்." மேனேஜர் கத்திக்கொண்டே வசந்தனை நோக்கி நடந்தார்.

"சார்.. சார்... வெரி சாரி சார். ஃபோர்ஸா டிராயரை இழுத்தேன். இப்படி என்னை மீறிகிட்டு அது பறக்கும்னு நான் எதிர் பார்க்கவேயில்லை சார்.'' வசந்தன் வார்த் தைகளில் தந்தியடித்தான். அதற்குள் நந்தினி சுதாரித்துக் கொண்டு எழுந்து வசந்தன் அருகில் வந்தாள்.

ஆபீஸே கப்சிப் வசந்தனை தன் அனல் விழிகளால் வெறித்த நந்தினி பளாரென்று ஒரு அறை அறைந்தாள். அவனுக்கு அப்படியே காதுக்குள் ராக்கெட் பறக்க ஆரம் பித்தது.

"இவ்வளவு கேர்லெஸா வேலை செய்யறவங்கள எல்லாம்

சிவியரா பனிஷ் பண்ணணும். இல்லேன்னா இவங்க வழிக்கு வரமாட்டாங்க." என்று ஒரு கத்துகத்திவிட்டு விறுவிறு வென்று அங்கிருந்து விலகிச் சென்றாள். ஆபீஸே வாய டைத்துப்போய் நின்று பார்த்து கவனித்தது.

வசந்தன் தலை, துவண்டு போய்விட்டிருந்தது!

பெரியபாளையத்தின் பெயரை மாற்றி பாலிதீன் பாளையம் என்று வைத்துவிடலாம் என்று தோன்றியது மாரிமுத்துவுக்கு. பெரியபாளையம் ஊருக்குள் கார் விரைந்து கொண்டிருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் பாலிதீன்தாள்கள்தான்!

மனிதகுலத்தையே அழிக்க வந்த அசுரனுக்கு அந்த பவானியம்மனே வாழும் ஊரில் அபரிமிதமான வரவேற்பு இருப்பது ஆச்சரியமாக இருந்தது. மாரிமுத்து எதனாலோ இப்பொழுது ஊர் உலகம் பற்றியெல்லாம் கவலைப்பட ஆரம்பித்து விட்டான். அவன் அருகில் அமர்ந்திருந்தாள் வந்தனா. வெளியே அவள் தெரியாமல் இருக்க கூல் பேப்பர் ஒட்டப் பட்டிருந்தது.

மாரிமுத்து வெளிப்புறம் பார்த்து கவலைப்படுவதை யூகித்த வளாக கேட்டாள்.

"என்ன டார்லிங்... ஏன் ஒரு மாதிரி ஆயிடிச்சு உங்க முகம்?"

"வெளிய பார்த்தியா வந்தனா?"

"பார்த்தேன். அஸ்யூஸ்வெல் எனக்கொண்ணும் வித்யாசமா தெரியலியே."

''நல்லா பாரு..''

''நல்லா பார்த்துட்டுதான் சொல்றேன்.''

"என்னத்த பார்த்தே நீ... எங்கப்பார் பாலிதீன் குப்பை, காகிதக் குப்பையையே அனுமதிக்ககூடாத தேசத்துல இந்த குப்பை எவ்வளவு ஆபத்தானது."

"ஓ... இதானா விஷயம்?"

"என்ன வந்தனா அவ்வளவு சாதாரணமா சொல்லிட்டே."

''இது அரசியல்வாதிகளோட கவலைங்க."

"மண்ணாங்கட்டி! அவங்க இதை வெச்சு வாழ்க்கை நடத் தறவங்க. அவங்களாலதான் இந்த பிரச்சினையே.''

"எப்படி?''

"எப்படியா... நீ சொஸைட்டிய பத்தி யோசிச்சு பாக்கறதே இல்லையா?''

"எங்க அதுக்கெல்லாம் நேரம் இருக்கு?''

"அதுவும் சரிதான்... முதல்ல இந்த பாலிதீன்தாள் எப்படிப்பட்டதுன்னு தெரிஞ்சுக்கோ, இது பிளாஸ்டிக்கோட குழந்தை. அசுரன்மாதிரி பூமிக்கடியில எவ்வளவு வருஷம் கிடந்தாலும் மட்கி மண்ணாகாது. அதுமட்டுமல்ல நிலத்தடி நீர் மழையாலதான் உருவாகுது. அந்த நீரையும் இது கீழே போகவிடாது. இந்தநிலை பத்து வருஷம் தொடர்ந்தா இந்த பூமி என்னாகும்?" அவனது ஆவேசமான விளக்கமும், கேள்வி கேட்ட தொனியும் அவளை அவனையே ஊன்றிப்

பார்க்க வைத்தது.

கார் விரைந்து கொண்டேயிருந்தது.

உள்ளே இதமான ஏ.சி!

''என்ன வந்தனா... எதுக்கு இப்படி பாக்கறே?''

''உங்களோட சமூக சிந்தனை எனக்கு வியப்பா இருக்குங்க..''

''உடனே என்னை பெரிய மகாமனிதனா நினைச்சுடாதே. நானும் இந்த மாதிரி உணர்ச்சியெல்லாம் இல்லாம ஊரை சுத்திகிட்டிருந்தவன்தான். எப்ப நான் குமாரசாமி சித்தரை சந்திச்சேனோ, அப்பவே வாழ்க்கைப்பாதை மாறிடிச்சுன்னு தான் சொல்வேன்.''

''உண்மைதாங்க... அவர் பார்த்தாலே போதும், நமக்குள்ள எவ்வளவோ மாற்றங்கள். பேசக்கூட வேண்டாம்கற மாதிரி தோணுதுல்ல.''

''ஆமாம் வந்தனா... இருந்தாலும் அவர் உன் வரைல பேசி என்னை உன் கணவனாக்கினத நினைச்சா எனக்கு இப்பக்கூட ஆச்சரியமா இருக்கு,''

''போதும் டார்லிங், உடனே நான் உனக்கு ஏற்ற ஜோடியே இல்லை, அப்படி இப்படின்னு ஆரம்பிச்சுடாதீங்க. உருவத்துல என்னங்க இருக்கு. உள்ளம்தான் எப்பவும் பெருசு.''

வந்தனா பேசியது வசனகர்த்தா எழுதிக் கொடுத்த வசனம் போலத்தான் இருந்தது. ஆனால், அது ஆத்மார்த்தமான பேச்சாக இருந்ததுதான் ஆச்சரியம்.

அவர்கள் பயணித்த காரும் பெரியபாளையம் கடந்து காக்கவாக்கம் என்கிற ஊரை ஒட்டிப்போய் ஒரு புளிய மரத்தடியில் தேங்கி நின்றது.

இருவரும் இறங்கினார்கள்.

நல்லவேளை வெளியே பெரிதாக கூட்டமில்லை. டிரைவர் காருக்கு காவலாக நின்று கொண்டான். வந்தனாவும், மாரி முத்துவும் புளியமரத்தை ஒட்டி நீண்டு கிடந்த வயல் வெளியில் இறங்கினார்கள். கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பசுமையாக இருந்தது. வரப்புகளும் ஒன்றும் அகலமில்லை. அதில் செருப்பை கழட்டி கையில் பிடித்துக் கொண்டு வந்தனா நடந்தாள். வரப்பில் சில இடங்களில் சில பெண்கள் இருந்து களைகளை பிடுங்கிப் போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் அவளைப் பார்த்து சிரித்தனர். இந்த சிரிப்பே அவள் அடிக்கடி அந்தப்பக்கம் வந்து போகின்றவள் என்பதை சொல்லிற்று.

"எப்படிதாயிஇருக்கே?"

''நல்லாருக்கேன் ராமக்கா.''

"நேத்துதான் நீ நடிச்ச படத்தை டென்டு கொட்டாயில பாத்தேன். உன்னிய எனக்கு நல்லா தெரியும்னேன். நம்ப மாட்டேன்னுட்டாங்க.."

கையில் களையோடு சிரித்தாள் அந்த பெண். பதிலுக்கு சிரித்த வந்தனா தொடர்ந்து நடந்தாள். அவர்கள் எங்கே போகிறார்கள் என்றே தெரியவில்லை. டிரைவர் வியப்பான

வியப்போடு பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அவனுக்கு வந்தனாவே ஒரு வியப்பான பாத்திரம்தான். அவள் நடிகை யாக இருப்பது, நடிப்பது எல்லாமே. வியப்புதான்.

வாழ்க்கையில் புரிந்து கொள்ளமுடியாத விஷயங்கள் எவ்வளவோ. அதில் வந்தனாவுக்கு பிரதான இடம் கொடுத்தி ருந்தான்.

ஒரு கட்டத்தில் இருவரும் கண்ணை விட்டு மறைந்து விட்டனர். யாராவது பத்திரிகையாளர்கள் வந்து பார்த்தால் ஆச்சரியப்படுவதோடு, போட்டோ எடுத்து அதையே ஒரு செய்தியாக்கிவிடுவார்கள். மாயச்சாமியாரை தேடி மர்மப் பயணம் மேற்கொண்ட நடிகை என்றெல்லாம் செய்தி போட்டு விடுவார்கள்.

அவர்களோ வயல்பரப்பில் நடந்தது போதும் என்று ஒரு தென்னந்தோப்பில் பிரவேசித்திருந்தனர்.

தோப்பில் சுற்றிச் சுற்றிப் பார்த்தனர்.

''வாங்க..'' அவர்களுக்கான அழைப்பொலிதான் காதில் விழுந்தது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்பது தெரியவில்லை. திரும்பித் திரும்பிப் பார்த்தனர்.

சப்தம் தலைக்குமேல் இருந்து கேட்பது போல தோன்றவே நிமிர்ந்து பார்த்தனர். மரம் ஒன்றின் உச்சியில் அரிவாளுடன் ஒருவர் அமர்ந்திருந்தார்.

இடுப்பு வேட்டியையே மடித்து லங்கோடு போல் கட்டி யிருந்தார்.

"சாமி. அங்க கென்ன பண்றிங்க?" மாரிமுத்து உற்சாகமாக கூவினான்.

"தாகமா இருந்தது... இளநீர் வெட்றதுக்காக ஏறினேன்." என்றார் அவர்.

அவனுக்கு அந்த பதில் திகைப்பைத் தந்தது. போன சந்திப்பின்போது தங்களுக்கு இளநீர் வேண்டுமா என்று கேட்டுவிட்டு உட்கார்ந்த இடத்தில் இருந்து மரத்தை அண் ணாந்துதான் பார்த்தார்.

நான்கு காய்கள் பொலபொலவென்று உதிர்ந்து விழுந்தது. அதை சீவுவதற்குகூட நகத்தை பயன்படுத்தியே சீவிவிட்டார். எப்படி... எப்படி? என்று கேட்டதற்கு சிரிப்பைத் தவிர வேறு பதிலே வரவில்லை அவரிடம்.

இப்பொழுதோ ஏறிப்பறித்துக் கொண்டிருக்கிறார்!

மாரிமுத்து குழம்பிப்போனான்.

"என்னங்க. சாமியை புரிஞ்சுக்க முடியல இல்ல? வந்தனா வும் கேட்டாள்.

"ஆமாம் வந்தனா... நாம ஏதாவது கேட்டா சிரிப்பார். என்னத்த சொல்ல..." அவன் ஆயாசப்பட்டுக் கொள்ள, மரத்தில் இருந்து அப்படியே ஒரு கல் விழுந்தது போல விழுந்தவர் ஒரு சில நொடிக்கு பிறகு உடம்பை உதறிக் கொண்டு எழுந்தார். அருகிலேயே ஒரு கட்டிலுக்கு இரண்டு கட்டில் கிடந்தது. அதில் போய் உட்கார்ந்தார். அவர்க ளையும் உட்காரச் சொன்னார். இருந்தாலும் இருவரும்

நின்று கொண்டேயிருந்தனர்.

"அப்புறம்... எங்க இவ்வளவு தூரம்?"

விசாரிக்க ஆரம்பித்து விட்டார். சாதாரணமாக இப்படி எல்லாம் கேட்கவே மாட்டார். வந்த காரணத்தை சொல்லிக் கொண்டுதான் பேச்சையே ஆரம்பிப்பார்.

அதிலும் இன்று மாறுபட்டு பேச்சை அவர் ஆரம்பித்த விதம் அவனுக்கு என்னவோ போலிருந்தது.

"என்ன சாமி... எல்லாம் தெரிஞ்ச நீங்க இன்னிக்கு சராசரி மனுஷன் மாதிரி பேசறீங்க.. நடந்துக்கறீங்க."

"யாருப்பா சொன்னது நான் சராசரியில்லைன்னு, நானும் சராசரி மனுஷன்தான்." என்று கீழே கிடந்த இளநீர் காய் களில் ஒன்றை எடுத்து அரிவாளால் வெட்டத் தொடங் கினார்.

வந்தனாவுக்கு மட்டும் ஒரு விஷயம் துல்லியமாய் புரிந்தது. அவர் கோபமாக இருக்கிறார் என்பதுதான் அது.

"சாமிக்கு எங்க பேர்ல கோபம்னு நினைக்கறேன்." என்று கச்சிதமாக கேட்டாள்.

"கோபமா... எனக்கா... சேச்சே..." அவர்தலை ஆடியது.

"அப்புறம் ஏன் சாமி வித்யாசமா பேசறீங்க?"

"பரவால்லியே... பளிச்சுன்னு விஷயத்துக்கு வந்துட்டியே."

"உங்களை எனக்கு தெரியாதா சாமி. ஒரு தெருப்பிச்சைக் காரி நான். இன்னிக்கோ கோடீஸ்வரி. எத்தனை வருஷம்.

எவ்வளவு பழக்கம்?"

வந்தனாவின் பதிலில் பல புதிய செய்திகள்.

அவர் பதிலுக்கு சிரித்தார். பின், ''நல்லா இருக்கீங்க தானே?'' என்று கேட்டார்.

"உங்க ஆசீர்வாதத்தால ஒரு குறையும் இல்லசாமி.''

''அந்த நடிகன் ஒருத்தன் தொந்தரவு பண்ணிகிட்டே இருக்கான்னு சொன்னியே. அவன் இப்ப சரியாயிட்டானா?''

"ஆயிட்டான் சாமி. இப்பல்லாம் ரொம்ப மரியாதையாவே நடந்துக்கறான்."

"எல்லாம் அந்த ஈசனோட கருணை.'' அவர் கைகள் ஆகாயத்தை நோக்கி உயர்ந்தன. மாரிமுத்து மௌனமாகவே இருந்தான் அவர் பார்வை இப்பொழுது அவனை ஊடுரு வியது.

"என்ன சாமி... எதுக்கு இப்படி பாக்கறீங்க?" அவனும் கேட்டான்.

''தப்பு பண்ணிட்டியே.." சாமியிடம் சுரத்தில்லாத மறுபதில்.

''தப்பா... நானா?''

"ஆமாம்... நீயேதான்."

"இல்ல சாமி... நான் ஒரு தப்பும் பண்ணலை சாமி. வந்தனாவை கல்யாணம் பண்றதுக்கு முந்திகூட நான் கொஞ்சம் அப்படி இப்படிதான், எப்ப உங்க பார்வை என் மேல பட்டதோ, அப்பவே நான் சரியான ரூட்டுக்கு

வந்துட்டேன் சாமி."

"ரூட்டுக்கு வந்து என்ன பிரயோஜனம்? அப்பப்ப என்னைப் பத்தி யார்கிட்டேயாவது பேசிடறியே.."

"சாமி...."'

"இப்ப புரியுதா. நீ செஞ்ச தப்பு என்னன்னு?"

"என்னங்க.. சாமி என்ன சொல்றார். யார்கிட்ட சாமி பத்தி என்ன பேசினீங்க?"

"ஒண்ணுமில்ல வந்தனா... ராமராஜோட கல்யாண ரிசப் ஷனுக்கு போயிருந்த இடத்துல வசந்தன்கற என் ஃப்ரெண்ட் வாயைக் கிளறினான். அப்ப நான் சாமிபத்தி பேசும்படி ஆயிடிச்சு."

"பேசினது மட்டுமா... நான் இங்க இருக்கேன்னு வேற சொல்லி வெச்சிருக்கே."

"ஒரு ஆதங்கத்துல அப்படி சொல்லிட்டேன் சாமி."

"ஆதங்கம் இல்ல... பலவீனம்"

"பலவீனமா?"

"ஆமாம்... வந்தனாங்கறவ ஒரு இமயமலை மாதிரியும், நீ ஒரு நொண்டி, உன்னால அந்த மலை மேல ஏற முடியா துங்கற மாதிரியும் ஒரு எண்ணம்.. அதாவது தாழ்வு மனப் பான்மை."

"உண்மைதானே சாமி அது, அவ எங்க... நான் எங்க?"

"பைத்தியக்காரா... இவ உண்மைல எங்க, எப்படி இருந்

தான்னு உனக்கு தெரியுமா? புத்தூர் ரயில்வே ஸ்டேஷன்ல நிஜமாலுமே பிச்சை எடுத்துகிட்டிருந்தவ இவ. இவகிட்டயும் ஒரு வசீகரிக்கிற விஷயம் இருந்தது. எவ்வளவு கஷ்டப் பட்டாலும் தனக்கு கிடைக்கறதுல, சரி பாதியை அந்த பிளாட் ஃபாரத்துல இருக்கற ஒரு நாய்க்கு போட்டுடுவா. அந்த நாயோட கால் ஒண்ணுல ரயில் சக்கரம் ஒரு தடவை ஏறிடிச்சு. உயிர் போகாம அது துடிச்சுகிட்டிருந்தது. தூக்கி கிட்டு ஒரு டாக்டர்கிட்ட ஓடினா. அவர் கால்ல விழுந்து நாயை காப்பாத்த சொன்னா! பதிலுக்கு அவர் வீட்டு வேலையை எல்லாம் செய்யறேன்னா. அந்த டாக்டரும் ஒரு நாய்ப்பிரியர். அவர் வீட்ல இரண்டு நாய் இருந்தது. இவளோட நேசத்தைப் பார்த்து ரொம்ப ஆச்சரியப்பட்டார். சரின்னு சொல்லி தன் டிஸ்பென்சர்ல வேலைக்கு சேர்த்துக் கிட்டார். அவர் என்னை பார்க்க இங்க வருவார். அப்படி வந்தவர், அந்த மூணு கால் நாயை பத்தியும், இவளைப் பத்தியும் சொன்னப்போ நான் அதிசயப்பட்டு போனேன்.

அடுத்த முறை வரும்பொழுது இங்க அவளை கூட்டிகிட்டு வரச் சொன்னேன். அப்படி கூட்டிகிட்டு வந்தப்போதான் இவ என்னை சந்திச்சா. உனக்கு என்ன வேணும்னு கேட்டேன். டாக்டர் ரொம்ப நல்லவரு. அவர் நல்லா இருக்கணும்னா. என்ன ஒரு மன அழகுன்னு நினைச்சு ஆச்சரியப்பட்டேன். அந்த அழகைத் தூண்டி விட்டதுதான் நான் செய்தது. இன்னிக்கு அதனால வரதாயியா இருந்த இவ வந்தனாவா ஆயிட்டா.

இந்த நிமிஷம் இவ மன அழகுல ஒரு மாற்றமும் இல்லை.

அது மாறாத வரை இவளுடைய வசீகரம் அதிகரிச்சுட்டு தான் போகும். ஒரு கட்டத்துல இவளுடைய மன அழகோட அலைகள் சிங்கம், புலி போன்ற மிருகங்களையே இவளை ஸ்னேகிக்க வைக்கும்.

உன்கிட்ட எனக்கு பிடிச்ச விஷயமே உண்மை பேசற குணம் தான்! எவ்வளவோ ஓட்டைங்க உன்கிட்ட. தண்ணி, சிகரெட், பொம்பளன்னு. ஆனாலும் உன் மனசுல பொய் ஒட்டலை. பளிச் பளிச்சுன்னு உண்மை பேசினே. நீ பேசின உண்மைதானே உன்னை இங்க என்கிட்ட கொண்டுகிட்டு வந்து சேர்த்தது. ஞாபகம் இருக்குல்ல?'' அவர் தன் நீண்ட பேச்சில் இறுதியாக ஒரு கேள்வியோடு கொக்கி போட்டார். அவனும் தலையை ஆட்டினான்.

அது ஒரு இண்டர்வியூ!

அதில் சகட்டுமேனிக்கு கேள்விகள். ஒரு கேள்வி மிக தர்ம சங்கடமான கேள்வி.

"கடைக்கு போய் நிரோத் வாங்கற ஒரு குழ்நிலை வந்தா தைரியமா போய் கூச்சமில்லாம வாங் குவீங்களா?''

"எனக்கு அந்த விஷயத்துல கூச்சமே கிடையாது சார்."

இது மாரிமுத்துவின் பதில்.

"அப்ப ஏற்கனவே வாங்கின அனுபவம் இருக்கா?"

''இருக்கு சார்."

''எதுக்கு?"

"காண்டம் எதுக்கு சார் வாங்குவாங்க, பலூன் விடற துக்கா?"

"அப்ப உங்களுக்கு செக்ஸ்ல எக்ஸ்பீரியன்ஸ் இருக்கா?"

"நிறைய இருக்கு."

"இதை நீங்க ஒழுக்கக்கேடா நினைக்கலயா?"

"ஆமாம்... ஒழுக்கக்கேடுதான்."

"தெரிஞ்சும் தப்பு செய்யலாமா?"

"இப்ப நான் செய்யறதுல்ல சார். அதே சமயம் செக்ஸ்ல ஆசைப்பட்டு விழுந்தப்போ, எனக்கு ஒழுக்கம் பத்தி எல்லாம் தெரியாது. வயித்துப்பசி மாதிரிதான் உடம்பு பசியையும் நினைச்சேன்."

எந்த தடுமாற்றமும் இன்றி மாரிமுத்து சொன்ன பதில் இண்டர்வியூ செய்தவரை அப்படியே ஒரு வினாடி அவ-னையே உற்றுப் பார்க்க வைத்தது. பிறகு அவரே கேட்டார்.

"இந்த ஆபீஸ்ல நிறைய பெண்கள் இருக்காங்க. திரும்ப நீங்க அந்த தப்பை பண்ண மாட்டீங்கங்கறதுக்கு என்ன உத்திரவாதம்?"

"ஒண்ணும் கிடையாது சார்... என்னைப் போலவே யோசிக்கிற ஒரு பொண்ணு இருந்தா தப்பு நடக்கலாம். இருந் தாலும் இப்ப நான் விழிப்போட இருக்கறதால தப்பு செய்ய தொண்ணுறு சதம் இடம் தரமாட்டேன்."

"சரி... இப்படி இண்டர்வியூவில் உண்மை பேசினா வேலை

எப்படி கிடைக்கும்?"

"மூடி மறைச்சா மட்டும் கொடுத்துடப் போறீங்களா சார்?"

"என்ன சொல்றே... இந்த இண்டர்வியூவை ஒரு நாம்கி வாஸ்தே" இண்டர்வியூவா நினைக்கறியா?"

"சத்தியமா இல்லை சார்... உங்களைப் போல அதிகாரி களுக்கு உண்மை யார் சொல்றா, பொய் யார் சொல்றான்னு நல்லாவே தெரியும்,நான் சத்யகந்தன், ஸ்ரீராமன்னு சொன்னா நம்பவா போறீங்க? இல்ல என்கிட்ட இருக்கற இந்த பல வீனம் தான் மத்தவங்ககிட்ட இல்லையா? செக்ஸ் விஷயத் துல யாரும் யோக்யன் கிடையாதுங்கறதுதான் என் முடிவு.

அந்த ராமாயணத்து ராமனும், சீதையும் இப்ப இருந்தா அவங்களும்கூட சலனப்படத்தான் செய்வாங்க. எப்பவும் மன நிலைங்கறது சந்தர்ப்ப சூழ்நிலைகளால உருவாகற ஒண்ணு தான் சார். ஷகிலாபட போஸ்டர், சரோஜாதேவி புக், க்ளப் டான்ஸ் பாட்டுன்னு ஒரு நாளைக்கு ஒரு விஷயமாவது, ஒரு தடவையாவது கண்ணுல பட்டுகிட்டே இருக்கும் பொழுது, மனசு மரக்கட்டையா சீச்சின்னு சொல்லிகிட்டுல்லாம் இருக் காது. அப்படி இருக்க வேண்டிய அவசியமும் கிடையாது.

ஆகையால மனசளவுல கற்போட இருக்கறது இந்த காலத்துல முடியவே முடியாத விஷயம் சார். அது குருடா இருந்தா மட்டும்தான் சார் சாத்யம். ஆகையால இந்த விஷ யத்துல நான் எதையும் மூடிமறைக்க விரும்பல."

மாரிமுத்துவின் அடுத்தக்கட்ட விளக்கம் அந்த அதிகா

ரியை ஸ்தம்பிக்க வைத்து விட்டது. எல்லா விஷயத்திலும் வெளிப்படை. எதைக் கேட்டாலும் பளிச்சென்ற பதில், தெரியும் என்றால் தெரியும், தெரியாது என்றால் தெரியாது.

பிளந்து கட்டியிருந்தான். அதுதான் அவரை இறுதியில் 'பெக்கூலியர் கேண்டிடேட்' என்று அவன் அப்ளிகேஷனில் எழுத வைத்தது.

ஜிஎம் கூட கேட்டார்.

''எந்த வகைல இவர் பெக்கூலியர்?"

''இந்த இரண்டாயிரத்து மூணுலயும் அரிச்சந்திரனா இருக் -கார் சார்."

"யூ மீன்..''

"உண்மையே பேசறாரு..''

''அடக் கொடுமையே... அப்புறம் அந்த அரிச்சந்திரன் மாதிரி பொண்டாட்டியையேல்ல விக்க வேண்டி வரும்?''

"அதப்பத்தி கவலைப்படற மாதிரி தெரியல... நீங்க வேணும்னா பேசிப்பாருங்க." அந்த அதிகாரியின் பதிலைத் தொடர்ந்து அவன் ஜி.எம்மை சந்தித்தான்.

ஜிஎம், ஆழம் பார்க்க ஆர்ம்பித்தார்.

"ட்ரிங்க்ஸ் பழக்கம் உண்டா மிஸ்டர் மாரிமுத்து."

''முன்ன இருந்தது சார்.. இப்ப விட்டுட்டேன்."

''ஏன்?''

"அது நல்ல பழக்கம் இல்லைன்னு நினைக்கறதால."

''அப்ப ஆரம்பத்துல தெரியலியா?"

''ஆமாம் சார். குடிச்சா உடம்பு கெட்டுப் போயிடும். புத்தி தடுமாறும். தப்பு பண்ணுவேன்னுல்லாம்தான் சொன்னாங்க. அதெல்லாம் எப்படின்னு தெரிஞ்சுக்கறதுக்காவே குடிச்சேன். உண்மைதான்னு தோணிச்சு. அந்த பழக்கத்தை விட்டுட் டேன்."

மிகசகஜமாக மாரிமுத்து சொன்ன பதில் ஜிஎம்முக்கே புதிது, அற்ப விஷயங்களுக்கு கூட பொய் சொல்கின்றவர் களைத்தான் அவர் அதிகம் பார்த்திருக்கிறார். சாமிபிரசாத விஷயத்தில்கூட ஆபீசில் ஒருவர் அடித்து விடுவார். தெருக் கோடியில் உள்ள மாரியம்மன் கோவில் விபூதி குங்குமத்தைக் கொண்டு வந்து பழனிக்கு போய் அர்ச்சனை செய்து கொண்டு வந்ததாக புருடா அடித்து விட்டவர்களைப் பார்த் திருக்கிறார்.

ஆனால் இவனோ துளியும் தடுமாற்றமின்றி உண்மைகளை பேசுகிறான். ஒருவேளை இதுகூட ஒரு மெதட் ஆக இருக் குமோ? அவருக்குள் சந்தேகப் பூனையும் குறுக்கில் ஓடியது. அது அவர் கண்ணில் தெரிந்தது.

"என்ன சார்... நான் உண்மை பேசற இளிச்சவாயனா, இல்லை இதுகூட நடிப்பான்னு யோசிக்கிறீங்களா?''

கச்சிதமாகக் கேட்டான்.

''ஆமாம் மாரிமுத்து... அதுதான் உண்மை. ஏன் நீங்க

என்கிட்ட நடிக்கறதா நான் நினைக்கக்கூடாது?"

"அதுக்கு நான் ஒண்ணும் பண்ண முடியாது சார். நினைச்சா நினைச்சுக்குங்கன்னுதான் சொல்லமுடியும்."

''இல்லேன்னு மறுக்கலாமே."

"அப்படி மறுத்து நீங்க என்னை நம்ப வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. வேலைக்கு தேவையான தகுதி இருக்கறதா நினைச்சா வேலை கொடுங்க. இல்லாட்டி லஞ்சம் கொடுத்தாத்தான் வேலை கொடும்போம்னு சொல்லுங்க. அந்த லஞ்சத்தை என்னால கொடுக்க முடியுமான்னு பாக்கறேன். முடியாட்டி விட்டுடறேன். எவ்வளவு சார் உங்க ரேட்?''

"நோ... திஸ் ஈஸ் டூமச்..."

"அப்ப எனக்கு தகுதி இல்லேன்னு சொல்லுங்க... போயிடறேன்.''

''வேலைக்கான தகுதி முழுக்க இருக்கு. என்ன படிப்பு தேவையோ அது.மெடிகல் சர்ட்டிபிகேட், எண்ட்ரன்ஸ்பாஸ்னு எல்லாம் இருக்கு. கூடவே பயமுறுத்தற உங்க பேச்சுதான் பெரிய தடையா இருக்கு."

"அப்ப எப்படி பேசணும்னு சொல்றீங்க?"

''இதெல்லாம் என்ன... சொல்லிக் கொடுத்து வர்ற விஷ-யமா?''

நான் உண்மை பேசறதால யாருக்கு சார் நஷ்டம்?"

"தெரியாமதான் கேக்கறேன்... ஒரு கொலையை நீங்க

நேர்ல பாக்கறதா வெச்சுக்குவோம் போலிஸ்லே சாட்சிக்கு கூப்பிடறாங்க. சரின்னு போவீங்களா, இல்லை நான் பாக்க லைன்னு பொய் சொல்வீங்களா?''

"பார்த்தா பார்த்தேன்னுதான் சொல்வேன். அதே சமயம் போலீஸ்காரங்ககிட்ட நீங்க கோர்ட், கேஸ்ணு நினைச்ச நேரம் இழுத்தடிப்பீங்க. ஆகையால சாட்சி சொல்ல வரமாட் டேன். மீறி வற்புறுத்தி இழுத்துகிட்டு போய் நிறுத்தினா நீதிபதிகிட்ட பொய் சொல்லிடுவேன்னு சொல்வேன்."

படு வித்யாசமான பதில். சினிமா ஹீரோ கணக்காக, உயிர் போனாலும் சரி உண்மைதான் பேசுவேன் என்றெல்லாம் சொல்லாமல் மாரிமுத்து சொன்னதில் அவன் உண்மை பேசக் கூடியவன், அதே சமயம் அதனால் மாட்டிக் கொண்டு அவஸ்தைப்படவும் தயாராக இல்லாதவன் என்பது தெரி யவும், அவருக்கு அவன் மேல் நம்பிக்கை பிறந்தது.

இத்தனைக்கும் கட்டை குட்டையாய், கறுப்பாய் அவன் உருவத்தில் வசீகரம் இல்லாத நிலையிலும், பேச்சில் அவன் வசீகரித்து விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும் என்று, அன்று முழுக்க ஜி.எம்., அவன் நினைவாகவே இருந்தார்.

குமாரசாமி சித்தரை சந்தித்தபோது, மறக்காமல் சாமர்த்யம் இருந்தால் உண்மை பேசியும், நல்ல விதமாக பிழைக்க முடியும் என்பதற்கு சான்றாக மாரிமுத்து இருக்கிறான் என்று அவனைப்பற்றி அவரிடம் பேச, சாமியும் ஒருநாள் அவனை அழைத்து வரச்சொன்னார்.

அவனும் ஏதோ ஒரு ஆபீஸ் வேலைபோல அதை

நினைத்துக் கொண்டு குமாரசாமி சித்தரை சந்தித்தான். அன்று அவன் சித்தரைபார்த்த பொழுது சித்தர் வயலில் களை பிடுங்கிக் கொண்டிருந்தார். அவனோ சித்தர் என்ற வுடன் சடை பிடித்த தலைமுடி, தாடி மீசையுடன் அவரை கற்பனை செய்து வைத்திருந்தான். கோமணம் கூட கட்டி யிருப்பாரோ, மாட்டாரோ என்று நினைத்தான். ஆனால் அவரோ ஒரு விவசாயி போல, அவன் எதிரில். அவன் அவரிடமே, "குமாரசாமி சித்தர் இங்க யாரு?" என்று கேட்டான். பதிலுக்கு அவர், ''நீதான் மாரிமுத்துவா?"என்று திருப்பி கேட்டார்.

''ஆமாம். என்னை உங்களுக்கு தெரியுமா?"

''நான்தானே உன்னை வரச் சொன்னேன்.''

"அப்ப நீங்கதான் சித்தரா."

''நான் மனுஷன். சித்தன்கறதெல்லாம் என்னைச் சுத்தி சிலர் வெச்சுருக்கற அடையாளப் பேர்.''

"அப்படியா?''

"ஆமாம். ஆனா என்னைப் பார்த்தா சாமியார் மாதிரியே தெரியலதானே?''

"சுத்தமா தெரியலிங்க யாரோ ஒரு குப்புசமி, ராமசாமி மாதிரிதான் இருக்கீங்க."

பளிச்சென்ற அவன் பதிலை ரசித்தார்.

"சரி எங்க வந்தே?''

"ஜி.எம், உங்களை பாக்கச் சொல்லி அனுப்பிச்சார்."

''எதுக்கு?''

''போய் பாரு, உன் வாழ்க்கையே மாறிப் போயிடும் பாருன்னாரு..."

"அப்ப மாறணும்கற ஆசை இருக்கா?''

"ஆமாம். இருக்குது."

"ஏன்.. இப்ப உனக்கு வாங்கற சம்பளம் போதலையா?''

"போதலைன்னுதான் சொல்வேன்."

"எவ்வளவு சம்பளம்?"

"அது ஏழாயிரம் சில்லரை வருது. ஆனாலும், இதுல காரு பங்களாவெல்லாம் சாத்யமில்லையே."

"அப்ப கார் பங்களால்லாம் வேணும்னு சொல்லு."

"கட்டாயமா... கோடிக்கணக்குல பங்களாக்களும், காருங் களும் இந்த பூமியில இருக்குது. அம்புட்டையும் மனுஷங்க தான் அனுபவிக்கறாங்க. நானும் மனுஷன் தான். நான் மட்டும் அனுபவிக்க கூடாதா என்ன?''

"அது பேராசையா உனக்கு தெரியலியா?"

''ஆசைல குட்டி ஆசை பேராசைன்னு பிரிச்சு வெச்சு பாக்கறதே தப்புங்க சாமி. இருக்கப் போறது கொஞ்சநாள். எதையும் யாரும் எடுத்துகிட்டும் போகமுடியாது. அப்படி இருக்கைல எல்லாத்தையும் அனுபவிச்சுப் பாக்க நினைக் கறதுல என்னங்க தப்பு இருக்கு"

நல்லா பேசறே... ஆமா அதுக்கு என்ன தகுதி இருக்கு உனக்கு?''

''தகுதி... அரண்மனைல வாழறதுக்கு என்னங்க தகுதி வேணும்.. காசு இருந்தா பணக்காரன்கற தகுதி தானா வந்துடுது.''

"காசு பணம் வேணுமே?''

"ஆமாம்... வேணும்... ஒரு வேளை அதுக்குதான் உங்கள பாக்கச் சொன்னாரோ என்னவோ?''

"என்னப் பார்த்தா காசு பணம் வந்துடுமா?''

"எங்க முதலாளி, ஜி.எம். இவங்கல்லாம் நல்ல காசுக் காரங்க. வார்த்தைக்கு வார்த்தை 'ஜெய் குமாரசாமி சித்தாய நமஹ'ன்னு சொல்றாங்க. அப்படி அவங்க உங்க பேரை சொல்லி உங்களையும் சாமியா கும்புடறாங்கன்னா உங்க கிட்ட ஏதோ சரக்கு இருக்கத்தானே வேணும்?''

''இருந்தாலும் என்னப்பத்தி தப்புத்தப்பாகூட நினைக்கறே போல இருக்கே?''

"உங்களைன்னு இல்ல... சாமியார்னாலே தப்பாதான் முதல்ல எல்லாரும் நினைக்கறாங்க, அப்படித்தான் பல சாமி யாருங்களும் நடந்துக்கறாங்க. குறிப்பா பொம்பள விஷயத்-துல மோசம். எவ்வளவு பத்திரிகைங்க படிக்கறேன்.''

ஜி.எம். சொன்னது உண்மைதான் என்கிற மாதிரி மாரி முத்து பொலபொலவென்று நினைப்பதை எல்லாம் கொட்டி-னான்.

அவனது உண்மையும் துளிகூட சுடவில்லை.

அந்த அளவு எதார்த்தமாக இருந்தது அவன் பேச்சு. அவன் வருவதற்கு சில நிமிடம் முன்புதான் வந்தனா வந்து விட்டு போயிருந்தாள்.

''சாமி.. ஏன்தான் நடிகையானோமோன்னு இருக்கு சாமி.'' என்றுதான் அழுதிருந்தாள்.

''யாரும் எனக்கொரு மனசு இருக்குன்னே நினைக்க மாட்டேங்கறாங்க. உடம்பையே பாக்கறாங்க. அதை அடையறதுக்காக எவ்வளவுல்லாம் பொய் பேசறாங்க தெரியுமா? நான் ஒரு கறுப்பி... எங்கம்மா என்னை கரும் பிசாசுன்னுதான் கூப்பிடும். அப்படிப்பட்ட நான் மகாலட்சுமியாட்டம் இருக்கேனாம். ஒருத்தன் கூசாம பொய் சொல்றான். இன்னொருத்தன் ரதிங்கறான், மேனகைங்கறான். மேக்கப் அழகை எப்படி எல்லாம் வர்ணிக்கறாங்க தெரியுமா? நான் ஏன் நடிகையானேன்னு இருக்கு சாமி.''

சாமிக்கு அவள் அழுதது ஞாபகத்துக்கு வந்தது. அவளுக்கு ஒரு காவல் தேவை என்கிற முடிவுக்கு அப்பொழுதே வந்துவிட்டவர் இப்பொழுது அந்த காவலனாக மாரிமுத்துவை பார்த்தார். அவளுக்கு பிடித்த உண்மை இவனிடம் இருக்கிறது.

மனதுக்கு மிகப்பிடித்த விஷயங்களால்தான் புதிய, உறவுகள் உருவாக வேண்டும். அப்பொழுதுதான் அது நிற்கும். இவனும் செல்வத்தை விரும்பும் உண்மையானவனாக இருக்கிறான். அவளும் உண்மையை விரும்பும் பொய்யில்

இருக்கிறாள். அவர் கணக்கு சரியாக வேலை செய்தது. அதன்பின் சாதாரண க்ளார்க்காக இருந்த மாரிமுத்து வந்தனா மாரிமுத்துவாகி விட்டான்.

இதெல்லாம் பழைய கதை!

''அதெல்லாம் ஒரு முறை மாரிமுத்துவின் ஞாபகத்தில் வர, இதை எதற்கு இப்பொழுது யோசிக்க வைத்தார் என்கிற மாதிரிதான் அவரைப் பார்த்தான்.

''எதுக்கு பழசை யோசிச்சு பாக்கச் சொன்னேன் தெரி-யுமா?'' அவரே கேட்டார்.

''எதுக்கு சாமி?''

"தாழ்வு மனப்பான்மையால ஒரு உண்மையை நீ மறைச் சிட்டே உங்க இரண்டு பேரை சேர்த்து வெச்சது நானில்ல. உங்களுக்குள்ள இருக்கற உண்மையான சில விஷயங் கள்தான். அது தெரியாம என்னை காரணமா சொல்லி ஒருத்தனை நீ தூண்டி விட்டுட்டே. அவன் இப்ப சதா என் நினைவாதான் இருக்கான். அது தெரியுமா உனக்கு?''

மாரிமுத்துவுக்கு அவரின் பதில் அதிர்ச்சியாக இருந்தது.

"சாமி இதை நான் துளிகூட எதிர்பார்க்கலை சாமி.''

"எதிர்பார்க்கணும்... நீ உண்மையானவன்.. உண்மை பேசினே. அதுல தப்பு இல்லை. ஆனா என்னைப்பற்றி என் அனுமதியில்லாம யார்கிட்டேயும் சொல்லக் கூடாதுன்னு நான் சொன்னதை நீ மீறிட்டே." அவர் சொல்லச் சொல்ல அவன் தலை அதை ஆமோதித்தது.

"எந்த நிலையிலும் சில சித்துக்களை நான் இப்ப கையாள் -றதில்லங்கற முடிவுல இருக்கேன். ஆனா அவனோ என் சித்துக்கே பெரிய பரிட்சையா இருப்பான்கற மாதிரி தோணுது.'' சித்தர் சாமி வருத்தப்பட்டபடி சொல்லிவிட்டு, ''இரண்டு பேரும் அந்த குடிசைக்கு போங்க. இப்பகூட அவன் என்னைத் தேடிதான் வந்துகிட்டிருக்கான். அதை நீங்களே பாருங்க.." என்றார்.

அவர்களும் வேகமாக அருகில் இருந்த அந்த தென்னந் தோப்பின் எளிய குடிசைக்குள் நுழைந்து கொண்டனர். சாமியும் இளநீர் சீவ ஆரம்பித்தார். வசந்தனும் வயற்பரப்பில் தெரிந்தான். அவரை நெருங்கினான்.

''ஐயா..''

''உம்...''

"இங்க குமாரசாமி சித்தர்னு ஒரு சாமியார் இருக்காருங் களாமே."

"அப்படியா... எனக்கு தெரியாதே?"

நல்லா யோசிச்சு சொல்லுங்க... வழியில கேட்டேன். தோப்புல இருப்பாரு போய் பாருங்கன்னு சொன்னாங்க."

"தோப்புல நான்தான் இருக்கேன், வேணும்னா என்னை சித்தனா நினைச்சுக்குங்க."

"விளையாடாதீங்க... நானே ரொம்ப நொந்துபோய் வந்து ருக்கேன்.''

''நொந்து போய்தான் வாங்க, இல்ல வெந்து போய்தான்

வாங்க. எனக்கென்ன வந்துச்சு? எனக்கு தெரிஞ்சு யாரும் இங்க இல்ல."

அவர் பதில் வசந்தன் முகத்தில் ஏமாற்ற அலையாக பரவியது. சோர்வுடன் திரும்பி நடந்தான்.

மாரிமுத்துவும், வந்தனாவும் மெல்ல குடிசையை விட்டு வெளியில் வந்தனர். சாமியும் அவர்களை பார்த்தீங்களா?" என்கிற மாதிரி பார்த்தார்?

# 4

*வசியத்தை மாயவித்தையாக கருதுபவர்கள்தான் அதிகம். அதற்கு காரணமும் இருக்கிறது. சில உபாசகர் களும் மாந்திரீகர்களும், விபூதி, மை முதலியவற்றால் எதிரியை வசியப்படுத்தும் வித்தை தெரிந்தவர்களாகவும், வேண்டாதவர்களை அடக்குவதற்காக அந்த வித்தையை பயன்படுத்துகின்றவர்களாகவும் இருக்கின்றனர். பொது வில் வசியம் என்பதே மனமும் அதன் உணர்வுகளும் சார்ந்த ஒன்று. இது பஞ்சபூதத்தில் ஆகாய அம்சமாகும். மனித உடலில் ஆகாய அம்சமாக உள்ளதை குரங்கு போல ஆட்டி வைக்க கற்றுக் கொண்டு விட்டால் வசியக்கலை வசப்பட்டு விட்டது என்று பொருள்.*

*ஆசை மிக உள்ள மனிதர்களை சுலபமாக வசியப்படுத்தி விடலாம். ஆசை என்பது ஒருவித உலகப்பற்று. இதனால் புலன்களுக்கு இன்பம் ஏற்படுகிறது. உதாரணமாக ஒருவன் ஒரு பெண்ணை விரும்புகிறான் என்றால் அவள் உடம்பை*

விரும்புகிறான் என்றே பொருள். அவளும் அவனுக்குப் பிடித்த அழகில் நின்று அவன் மனதை பாடாய் படுத்துகிறாள்.

அதாவது கண்கள் ஒரு அழகைக்கண்டு கருத்தில் மயங்கி அதன் காரணமாய் பித்தாய் மாறிவிடுவதே ஆசை இப்படி ஆசை உடையவர்களின் உள்ளம், உடம்பு இரண்டும் பலவீனமான நிலையில் இருக்கும். இதை இப்படியும் கூறலாம். உள்ளம் உடல் இரண்டுமே பஞ்சபூதக் கலவைதானே? அந்த கலவை வலுவில்லாதபடி இருக்கும்.

யாரெல்லாம் பேராசை உடையவர்களோ அவர்கள் மிக பலவீனமானவர்கள் என்பதே உண்மை,

இப்படி பலவீனமானவர்கள் காலில்லாதவன் விழுந்து விடாதபடி நிற்க எதையாவது பற்றிக் கொள்ள துடிக்கிற மாதிரி தாங்கள் ஆசைப்படும் விஷயத்தை அடைய, மனதளவில் அதையே பற்றிக்கொண்டு துடிப்பார்கள். இந்த நிலையில் உடம்பிலும் ரசாயன ரீதியாய் பல மாற்றங்கள் நிகழும் உடம்பில் பலவிதமான சுரப்பிகள் உள்ளன. அவை உணர்வுகளின் தன்மை மற்றும் அழுத்தத்திற்கு ஏற்ப சுரக்கக் கூடியவை,

அவை சுரக்கத் தவறினால் பெரிய அளவில் மனதில் எண்ண அலைகள் ஏற்படாது. சில மனநோயாளிகளை குணப்படுத்த உடம்பை கட்டிப்போடுவது ஒரு கலை, ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுப்பது ஊசிபோட்டு துவண்ட நிலையில் கிடத்துவது போன்றவற்றை கண்டிருக்கலாம். இதிலிருந்து உடம்பும் மனமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டிருப்பது புலனாகும்

அவ்வகையில் உடம்பு என்பது பஞ்ச பூதகலவை, அந்த

*கலவை வெளியில் அதாவது ஆகாயத்திலும் தொடர்பினை உடையது. நம் வீட்டு தொலைபேசியைக் கொண்டு உலகில் யாரோடும் ஆகாயமார்க்கமாக பேச முடிவது போல இந்த உடம்பும் ஆகாய மார்க்கமாக பிரபஞ்ச வெளியில் பல்வித தொடர்புகளை கொண்டிருந்தது.*

*வசிய மை, மந்திரித்த விபூதி முதலானவை அந்த தொடர்புகளில் ஒருவித கூடுதலான கிளர்ச்சியை ஏற்படுத்தக் கூடியவை. அதன் காரணமாக வசியத்துக் குரியவர் தூண்டப்பட்டு செயல்படுவார். அவரது மன ரேடியோவை, புறத்தில் உள்ள அலைவரிசைகளால் வெளியே இருந்து நிர்வகிக்கலாம்.*

*வசியர் இயற்கை வசியம், செயற்கை வசியம் என்று இரு பிரிவுபடும். ஒருவரின் ஈர்க்கும் சக்தி எதுவோ, அதை கண்டு கல்வி மற்றும் சிந்தனைச் சிறப்பால் பலப் படுத்துவது மற்றொன்றாகும்.*

குமாரசாமி சித்தரின் பார்வையும் கேள்வியும் வந்தனா, மாரிமுத்து இருவரையுமே மௌனமாக பார்க்கச் செய்தது.

அவர், அவர்களுக்கு தெளிவாக புரியவேண்டும் என்பதற்காக சற்று விளக்கமாகவே பேசத் தொடங்கினார்.

"உயிரினங்கள்ள நான் யார்ங்கற கேள்வி கேட்டுக்க முடிஞ்ச ஒரே உயிரினம் மனிதன்தான்; அந்த கேள்விக்கு பின்னாலதான் விஞ்ஞானம், மெய்ஞானம் இரண்டுமே இருக்கு. இரண்டுமே உருவானது.

இதுல மனித சக்தி எதெல்லாம் புரிஞ்சுக்கிட்டு வெளியில விளக்குதோ அது விஞ்ஞானம். புரிஞ்சுகிட்டாலும் வெளிய

விளக்க முடியாத சில விஷயங்களும் இருக்கு. அது மெய் ஞானம். அந்த மெய் ஞான விஷயங்கள் மேல ஒரு அதீத பற்றுதல் மனிதர்களுக்கு உண்டு. விஞ்ஞானம் எந்த விஷயத் துலையும் முதல்தடவை மட்டும்தான் வியப்பை ஏற்படுத்தும். அப்புறமா அது எதுவுமே செய்யாது. கெடிகாரம், செல்ஃ போன், டி.வி எல்லாமே முதல் பார்வைல நம்மை விழுங்குற தோட சரி அதன்பிறகு அது ஒரு சராசரி பரபரப்பைக்கூட நம்மகிட்ட உருவாக்கறதில்ல.

ஆனா மனித சக்தியில புரியவைக்க சிரமமான சில விஷயங்கள் இருக்கு. குறிப்பா அஷ்ட சக்திகள்ங்கற அஷ்டமா சித்து இருக்கே, இது எப்பல்லாம் வெளிப்படுதோ அப்பல்லாம் வியப்புதான்.

இது எப்படி சாத்யம். இது எப்படி சாத்யம்கற கேள்வியை அது எழுப்பி மனசை ஆக்ரமிக்கும்.

அஷ்டமா சித்துல நான் வசிய சித்துவை அறுபது வருஷ சிந்தனையாலயும், புலனடக்கத்தாலையும் பெற்றவன். ஆனா அதோட பலனை இந்த மனித சமுதாயம் அல்ப விஷயத்துக் கெல்லாம் விலைக்கு வாங்க முயற்சிக்குது. சுயமா அனுப விச்சு அறிஞ்சுக்க வேண்டிய ஞானக்கல்வி அது. ஆனா, அதை காசுக்கு வாங்க முயற்சிக்கறது எவ்வளவு கேவலம்."

குமாரசாமி சித்தர் அப்படி கேட்டபிறகுதான் மாரிமுத்து-வுக்கும் வந்தனாவுக்குமே சில விஷயங்கள் புரிய ஆரம் பித்தன.

குறிப்பாக அவர் ஏன் தன்னை வெளியே காட்டிக் கொள்ள

மறுக்கிறார் என்பது அப்பொழுதுதான் துல்லியமாக விளங்-
கியது.

"சாமி... சுயநலத்துக்காக உங்களை வந்து தொந்தரவு செய்வாங்கன்னு நீங்க சொல்றது இப்பதான் எனக்கு புரியுது. வசந்தன் நான் சொன்னதை நம்பியிருக்க மாட்டான். நான் ஏதோ சப்பை கட்டுகட்றதாதான் நினைப்பான்னு நினைச்சேன். ஆனா அவன் இவ்வளவு தூரம் நம்பிக்கையோட தேடி வருவான்னு எதிர்பார்க்கவே இல்லை சாமி."

"வெளிய ஆவேசமா நம்பாத மாதிரி பேசற ஒவ்வொருவருடைய உட்புறமுமே அதற்கு நேர் எதிரானதுங்கறத புரிஞ்சுக்கணும் நீ...

ஒருத்தர் எதை நான் நம்பலைங்கறாரோ அதை தீவிரமா ஆராயறவர்னு அர்த்தம், ஆராய ஆரம்பிச்சாலே பற்றுதல் தானா வந்துடும்."

"சரி சாமி... நீங்க எவ்வளவோ தெரிஞ்சவர். அவன் எதற்காக,இங்க வந்துருக்கான்கறதும் உங்களுக்கு தெரியுமே."

"அது உனக்குத் தெரிய வேண்டாம். நீங்க கிளம்புங்க. என்னைப்பற்றி நினைக்கறதையே விட்டுடுங்க. அதுதான் நீங்க எனக்கு செய்யற பெரிய உதவி, உங்களுடைய இயல்பான சுபாவத்துல உண்மையா இருங்க. மரணிக்கறவரை உங்களுக்கு பெரிய துன்பங்கள் நேராது. வாழ்க்கையும் அர்த்தமுள்ள ஒரு விஷயமா தானா மாறும்."

இறுதியாக முத்தாய்ப்பான ஒரு பதிலோடு அவர் அங்

கிருந்து குடிசைக்குள் சென்றார். மாரிமுத்துவும், வந்தனாவும் முதல்முறையாக ஒருவரை ஒருவர் சோகமாக பார்த்துக் கொண்டனர்.

'தப்பு செய்துட்டேன் வந்தனா. நீயும் என்னை மன்னிச்சுடு.' என்றான் மாரிமுத்து.

"இது நமக்கு ஒரு அனுபவங்க. சாமிகிட்ட சொல்லிகிட்டு கிளம்புவோம் வாங்க."

அவள் அவனை சமாதானப்படுத்தி விட்டு குடிசைக்குள் எட்டிப் பார்த்தாள். ஒரு அகல் விளக்கு தான் எரிந்து கொண்டிருந்தது. அவரைக் காணவில்லை. அவர் சித்து விளையாடத் தொடங்கிவிட்டார். காற்றோடு காற்றாக கலந்து எங்கே போனாரோ.?

வியப்போடு கன்னத்தில் போட்டுக் கொண்டு இருவரும் திரும்பத் தொடங்கினர்.

ஒரு வார சஸ்பென்ஷனுக்குப் பிறகு அன்று தான் அலுவலகத்துக்குள்ளேயே நுழைகிறான் வசந்தன். அலுவலகமே அமைதியாக செயல்பட்டுக் கொண்டிருந்தது.

கண்ணாடி அறைக்குள் மேனேஜர் தெரிந்தார். பக்கத்திலேயே நிர்வாக இயக்குனர் அறை. அறைக்கு முன்னால் ரிசப்ஷன் டேபிளில் ரிசப்சனிஷ்ட் இருந்தாள். அவள் இருந்தால், நந்தினி இருக்கிறாள் என்று பொருள். அதனால் தான் ஆபீஸே சுடுகாடு போல அமைதியாக இருக்கிறதோ? மனதில் சிந்தனையோடு சீட்டில் போய் அமர்ந்தான். காத்

திருந்த மாதிரி பியூன் வந்து அழைத்தான்.

"சார் உங்களை மேனேஜர் கூப்பிடறாரு..."

"போ... வரேன்." பதிலைச் சொல்லிவிட்டு டிராயரைத் திறந்து ஹேண்ட்பேக்கை வைத்தான்.

பக்கத்து சீட் கிளார்க் ஒரு மாதிரி பார்த்தான். அக்கவுண் -டன்ட் அமிர்தலிங்கத்தையும் பார்க்க முடியவில்லை. சீட் காலியாக இருந்தது. ஒரு வாரத்தில் என்னென்னவோ நடந் -திருக்கிறது என்று எண்ணியபடியே மேனேஜர் முன்னால் போய் நின்றான்.

"வாய்யா... சஸ்பென்ஷன் முடிஞ்சிச்சா?''

''...............''

''வாயைத் திறந்து பேசுய்யா.. பேசமாட்டியா?''

"உன்னால எப்படி பேச முடியும். நீ தூக்கி போட்ட மேஜை டிராயர் பட்டதுல மேடத்துக்கு இன்னும் தலைவலி, ஸ்கேன் எடுத்து பாக்கற அளவுக்கெல்லாம் பண்ணிட்டியேய்யா."

"சார்... அதுல என் தப்பு எதுவுமே இல்லை சார்... தற் செயலா நடந்த ஒரு விஷயம் அது."

"அதே தற்செயல்ல நான் உனக்கு டிஸ்மிஸ் ஆர்டர் கொடுத்தா வாங்கிக்குவியா?''

''சார்..''

"பேசாதே... ஆரம்பத்துல மௌனமாத்தானே இருந்தே. இப்ப எதுக்கு வாயாட்றே?''

"வாயாட்ல சார். உள்ளதை சொல்றேன். அதான் ஒரு வாரம் பனிஷ் பண்ணிட்டீங்களே."

இப்பதானே சொன்னேன். பேசக்கூடாதுன்னு."

"................"

"குட் அப்படியே நில். சொல்றத மட்டும் கேள்."

"................"

"கம்பெனி இப்ப ரொம்ப நஷ்டத்துல போய்கிட்டு இருக்கு. இந்த நிலைல இந்த ஆபீஸ்ல முந்நூத்திபத்து பேர் இருந்தா தாங்காதுன்னு நூத்திபத்துபேரை வீட்டுக்கு அனுப்ப நிர்வாகம் முடிவு செய்துருக்கு. நீ பயப்படாத... உன்னை எல்லாம் அனுப்பப் போறதில்ல. ஐம்பது வயசுக்கு மேல இருக்கறவங்க தான் வெளிய போகணும். அதே சமயம் உன்னை மாதிரி நபர்களை நல்லவிதமாவும் பயன்படுத்தணும். நீ பாக்கற கிளார்க் வேலையை ஒரு கம்ப்யூட்டர் பார்த்துடும். ஆகை யால உன்னை ஜாப் ட்ரான்ஸ்பர் செய்துருக்கேன்."

மேனேஜர் விஸ்தாரமான விளக்கத்தின் இறுதியில் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

'ஜாப் ட்ரான்ஸ்ஃஃபரா?"

"ஆமாம்... போனவாரம் வரை நீ அக்கவுண்ட்ஸ் க்ளார்க். இனிமே நீ எம்.டி. நந்தினி மேடத்தோட பி.ஏ."

"என்னது... நான் எம்.டியோட 'பி.ஏ.' வா?" வாயைப் பிளந்தான் வசந்தன்.

"ஆமாம்... அது என்னவோ தெரியல... அவங்களுக்கு பி.ஏ.வா.. போறவங்க இரண்டுநாள் தாக்குபிடிக்க மாட்டேங் கறாங்க. பத்து நாள்ல மூணு பேர் எழுதிக் கொடுத்துட்-டாங்க. நீ என்ன செய்யறேன்னு பாக்கறேன்."

வசந்தன் வெறித்தான்.

"எப்பன்னு கேட்கமாட்டியா?"

"எப்ப சார்.."

"இன்னிக்கே... இப்பவே." சொன்னபடி ஆர்டர் பேப்பரை அவன் எதிரில் நீட்டினார். அதில் அரைமனதாய் கையெ-ழுத்து போட்டுவிட்டு வெளியில் வந்தான்.

மீண்டும், அந்த பெஞ்ச் கிளார்க் ஒரு மாதிரி பார்த்தான்.

"எதுக்குய்யா இப்படி பாக்கறே?"

"பி.ஏ.வா..போட்டுருக்காங்கன்னு கேள்விப்பட்டேன். ஒத்து கிட்டீங்களா?"

"ஒத்துகிட்டுதானே ஆகணும்."

"பாவம் சார் நீங்க.. அந்த பிசாசுகிட்ட எப்படி சார் குப்பை கொட்டப் போறீங்க.. நம்ம தங்கராஜ் சார்கிட்ட செருப்புக்கு பாலிஷ் போட்டு கொண்டு வரச் சொல்லியிருக்காங்க."

க்ளார்க்கின் பேச்சு வயிற்றில் புளியைக் கரைத்தது.

ஏற்கனவே கன்னத்தில் விழுந்த அறை ஞாபகத்தில் வந்தது.

வாழ்க்கையில் எவ்வளவு வேண்டுமானாலும் அவமானப் படலாம். ஆனால் ஒரு பெண் கையால் மட்டும் அறை வாங்கக்கூடாது. அப்படி அறை வாங்கி விட்டால் அவ்வளவு தான். மனது சுண்டிச் சுருங்கி விடுகிறது. சதா அதே நினைவு தான் படுத்தால், எழுந்தால், நடந்தால் நின்றால் பளார் சப்தம் தான் காதில் கேட்கிறது. பதிலுக்கு ஒரு பத்து அறையாவது அறைந்தால்தான் ஆத்திரம் தீரும் போல் இருக்கிறது.

வசந்தன் புழுங்கியபடியே இருந்தான்.

ரிசப்ஷனிஸ்ட் இன்டர்காம் வழியாக, "மேடம் வாண்ட்ஸ் டு மீட் யூ" என்றாள். அந்த பிசாசு சந்திக்க விரும்புகிறதாம். அரைமனதாக எழுந்து சென்று அவள் எதிரில் நின்றான்.

அவள் ஒரு சாசரில் டீயை சப்பியபடி இருந்தாள்.

வந்து நிற்கும் வசந்தன் முகத்தைக்கூட ஏறிட்டுப் பார்க் காமல், "ரிசப்ஷன்ல பேட் இருக்கும். போய் எடுத்துகிட்டு வா. என்னை பார்க்க வரும்போது கைல பேட் பேப்பரும், பேனாவும் எப்பவும் இருக்கணும். அண்டர்ஸ்டாண்ட்." என்று கேட்டு கைகளைச் சொடுக்கினாள். சாரைப்பாம்பு இரு கண் களையும் இடுக்கிக் கொண்டு பார்க்கிற மாதிரி அவளைப் பார்த்துவிட்டு, வெளியேறி பேப்பர் பேனாவுடன் உள்ளே நுழைந்தான்.

"எழுதிக்க... நான் சொல்றத அப்படியே டி.டி.பில போட்டு பிரிண்ட் எடுத்துடு. அப்புறமா அதை அழகா இல்லஸ்ட் ரேஷன்க்கு, நடுவுல வெச்சு ஒரு கவர்ல ஒட்டி அனுப்பணும். இது ஒரு கல்யாண வாழ்த்து என் காலேஜ் ஃப்ரெண்டோட

கல்யாணம்." என்று எக்ஸ்பிரஸ் வேகத்தில் பேசியவள், 'மைடியர் லில்லி.' என்று நோட்ஸ் கொடுப்பது போல பேச ஆரம்பித்தாள்.

அவன் எழுதாமல் அவளைப் பார்த்து "ஒன் மினிட் மேடம்." என்றான்.

அவளும் பார்த்தாள்.

"எனக்கு ஷார்ட்ஹேண்ட் தெரியாது. டைப்ரைட்டிங் மட்டும் தான் தெரியும்." என்றான் வசந்தன்.

"அப்ப சொல்லச் சொல்ல டைப்பே பண்ணிடு."

"அதுக்கு டைப் ரைட்டர் வேணும். இங்க எப்படி?"

"நோ பிராப்ளம். இங்க என் சீட்டுக்கு எதிர்க்கையே. உனக்கு இனிமே சீட், வித் கம்ப்யூட்டரும், பிரிண்ட்டரும் ஓ.கே."

அவள் க்ஷனத்தில் தீர்வுக்கு வந்தாள். அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. பதினைந்தாவது நிமிடம் அங்கே ஒரு மேஜை நாற்காலி போடப்பட்டு, கம்ப்யூட்டரும் வைக்கப் பட்டு அருகிலேயே ஒரு பிரிண்ட்டரும் வைக்கப்பட்டது. அந்த வேகம் அவனை மிரட்டியது. டைப்பிங் தெரியும் என்று சொல்லிவிட்டானே தவிர டச் விட்டு பல நாளாகி விட்டது. இப்பொழுது எப்படி வருகிறதோ. வசமாக மாட்டிக் கொண்டு விட்ட மாதிரி உணர்ந்தவன், அப்படி இப்படி திரும்ப முடியாத படி அவள் எதிரிலேயே ஒரு அடிமைபோல வந்து அமர வேண்டி வந்ததை, ஒரு பெரியதோல்வியாகவே நினைத்தான்.

அழுகை வரும்போல தோன்றியது. அடக்கிக் கொண்டான்.

"கமான்... உன்னால பார், அரை மணி நேரம் எனக்கு வேஸ்ட்டா போயிடிச்சு." அவள் விரலைச் சுண்டி அழைத் தாள்.

அவனும் டைப் அடிக்க தயாரானான். அவள் படுவேக-மாக சொல்லிக் கொண்டு போனாள். அவனால் அவளை பின்பற்றவே முடிய வில்லை. அது அவன் டைப் செய்து நீட்டிய தாளில் தெரிந்தது. அதை வாங்கிப் படித்தவள் அப்படியே அந்த காகிதத்தை கசக்கி வீசி எறிந்தாள்.

"ஒழுங்கா காது கொடுத்து கேட்டு டைப் பண்ணு..." என்றாள் கடுமையான குரலில். அவனுக்குள் கோபமும், இயலாமையும் கூத்து கட்டி ஆடின.

அவ்வப்பொழுது கண்ணீர்த்துளி கூட எட்டிப் பார்த்தது. மொத்தத்தில் ஏண்டா வேலைக்கு வந்தோம் என்று தோன் றியது.

இறுதியாக,"சத்யம்தியேட்டர் தெரியுமா?"என்று கேட்டாள்.

''தெரியும்.''

''தெரியும் மேடம்னு சொல்லு."

"தெரியும் மேடம்.''

"போய் ஒரு நாலு டிக்கட் பால்கனிக்கு வாங்கி வை. நானும் என் ஃப்ரெண்ட்சும் வருவோம்."

அவள் கட்டளையிட்டு விட்டு, அவன் என்ன நினைக்

கிறான் என்று கூட பார்க்க விரும்பாமல் ஏதோ ஒரு ஃபைலை எடுத்து புரட்டினாள்.

'நான் கௌரவமான ஒரு ஊழியன். உன் அடிமை இல்லை.' அவனுக்கு அப்படி சொல்லிக் கத்த வேண்டும் போல தோன்றியது. ஆனால் அடக்கிக் கொண்டான். வெளி யில் வந்தான். கேன்டீன் நோக்கி சென்றான். அங்கே அவன் நெருங்கிய நண்பன் ஒருவன் இருந்தான்.

"என்னப்பா இனிமே எம்.டிக்கு பி.ஏ. வா?"

"மண்ணாங்கட்டி, அவளுக்கு பிஏன்னு சொல்றதுக்கு பதிலா, அவளோட கால்செருப்புன்னு சொல்லலாம். இல்லை அவளோட கர்ச்சிப்புன்னு சொல்லலாம்."

"அடேயப்பா. ஜாய்ன் பண்ணி முழுசா அரைமணி நேரம் ஆகலை... அதுக்குள்ற இவ்வளவு அலுப்பா?"

அலுப்பா. விட்டா கொலை செய்துடுவேன். அசந்தா கால் கூட அமுக்கிவிடச் சொல்வா போல இருக்கு."

"அசந்தா இல்லை... கட்டாயம் சொல்வா. இந்த பாடு படுத்தினா எவன் இருப்பான் இந்த கம்பெனில? அதான் ஒவ்வொருத்தனும் தலைதெறிக்க ஓடிட்டாங்க."

"ஆனா நான் ஓடமாட்டேன்." வசந்தன் பற்கள் நரநரக்க சொன்ன விதமே ஒரு தினுசாக இருந்தது.

"அப்ப டோட்டல் சரண்டர்னு சொல்லு."

"நீ இப்ப எப்படி வேணும்னா சொல்லு, ஆனா போகப்

போக பார். அறைக்கு அறை. கேலிக்கு கேலி. அவளை நாயா ஆட்டி வைக்கறேன்.''

''அதுக்கெல்லாம் இனிமேதான் ஒருத்தன் பொறந்து வரணும். அதிகபட்சம் சாரி மேடம், உங்ககிட்ட என்னால குப்பை கொட்டமுடியாதுன்னு ஒரு கால்கடுதாசி எழுதிக் கொடுத்துட்டு புறப்படலாம். அவ்வளவுதான் உன்னால முடியும்.''

"அதையும் பாக்கறேன்.''

வசந்தன் எந்த நம்பிக்கையில் அப்படி சொன்னான் என்பது விளங்கவில்லை. ஆவேசமாக அங்கிருந்து கிளம்பினான். அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டது மட்டும் துல்லியமாக விளங்கிற்று.

# 5

***செயற்கையான வசிய - முறைகள் பற்றி மந்திர தந்திர நூல்களில் பல செய்திகள் காணக் கிடைக்கின்றன. இந்த புத்தகங்களைப் படித்து இதிலுள்ளபடி, செயல்படப் பார்த்து தங்களை இழந்து விட்டவர்கள் அனேகம்.***

***ஒருவராவது புத்தகம் படித்து மந்திர தந்திரம் கற்றார்களா என்றால் இல்லை என்பதே பதிலாகும். மந்திர தந்திரம் கற்க நமது ஜாதகத்தில் அனுமதி இருக்க வேண்டும்.***

*மந்திர தந்திரங்களைக் கற்பது பெரிதில்லை. அதை*

*காப்பது மிக சிரமமானது. நல்ல காரியங்களுக்கு மட்டுமே அதை பயன்படுத்துவது அதைவிட சிரமமானது.*

*ஜாதக விதிப்பாடு காரணமாக இவைகளை கற்றுக் கொண்டு விட்டவர்கள் சில காலத்திற்கே நேர்மையாக இருக்க முடிகிறது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் மாறிவிடும் நிலைதான் இன்று உள்ளது.*

*மந்திர தந்திரங்களை அறிந்து செயல்படுவதும் சாதாரண விஷயமில்லை. அது புலிவேட்டைக்கு ஒப்பான ஒன்று.*

*அந்த நாளில் தங்கள் பேச்சைக் கேட்டு தங்கள் காலடியிலேயே பலரும் கிடக்க வேண்டும் என்று ஆசைப் பட்ட சிலர் ஜாலத்திரட்டு வித்தைகளில் ஈடுபட்டார்கள். இதற்காக அவர்கள் ஊமத்தை, பொன்னாங்கண்ணி, செம்முள்ளி, கஞ்சா, செங்குவளை, பொன்னாவரை, புனுகு, பாதரசம், கோரோசனை, புல்லாமணக்கு, சென்னாயுருவி போன்ற தாவர உலோக வகையறாக்களை திரட்டி எடுத்து வந்து இவைகளை தனித்தனியே பிழிந்து சாறு எடுத்து பின் ஒன்றாக சேர்த்து ஒரு கல்வத்தில் இட்டு (மூலிகைப்பானை) மத்து கொண்டு மை போல் அரைத்துவழித்து பின் அதை பகவதி உபாசனா பூஜையில் வைத்து பத்தாயிரத்து எட்டுமுறை பகவதி பிராண மந்திரத்தை இடைவிடாது ஜெபித்து அப்படி ஜெபித்த கையோடு அந்த மையைத் தீண்டும் பொழுது அதில் தீண்டுபவரின் உடல் மின்சார ஜெப சக்தியும் சேர்ந்திட, அந்த மையானது வேலை காட்டத் தொடங்கும்.*

*இந்த மையை வைத்திருப்பவர்கள் எவரைச்*

*சந்தித்தாலும் அவர்கள் இவர்களிடம் வசியமாவார்கள். இந்த மையுள்ளவர்களைத் தேடி பல மாதர்களும் தானாக வந்து சேருவார்கள். இவர்கள் சொன்னால் அவர்கள் மாடி உச்சியிலிருந்தும் கீழ் விழுந்து தற்கொலை செய்து. கொள்வார்கள்.*

*மைக்கு அவ்வளவு சக்தியா என்று எண்ணத் தோன்றும். அது பலவித பலவிதமான பஞ்சபூதக்கலவையால் உருவான ஒன்று. மையாக மாறிய நிலையிலும் அதன் கதிர்வீச்சு செயல்பட்டபடி இருக்கும். அது எந்த மனிதர் மேல் எல்லாம் படுகிறதோ அவர்கள் அந்த கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு பொதுவில் எதிரிலுள்ள நபர் பற்றிய எதிர் மறையான எண்ணங்களை மறந்து போவார்கள். மாறாக ஒருவித சாம உணர்வை உருவாக்கிக் கொண்டு நேசிப்பார்கள்.*

*ஆனாலும், இன்று இந்த முறைகள் ஒழிந்து விட்டன. காரணம். பல வசிய மூலிகைகளை நாம் இழந்து விட்டோம். காடுகள் அழிக்கப்பட்டதில் அவைகளும் சேர்ந்து அழிந்து விட்டன.*

*எனவே மந்திர தந்திர முறைகளால் இனிவரும் காலங்களில் வசியசக்தியை அடைவது சற்று அசாத்யமே.*

***அ***து ஒரு ஒயின் ஷாப்!

பின்னாலேயே பார் இருந்தது.

குடிமகன்கள் பலர் உல்லாசமாக குடித்துக் கொண்டிருந் தனர். வசந்தனும் அந்த கூட்டத்தில் இருந்தான். அங்கே வந்த பிரபாகருக்கு வசந்தனைப் பார்க்கவும் ஆச்சரியமாகி விட்டது.

"டேய் மாப்ள... என்னடா இது? ஏண்டா நீயும் இப்படி ஆயிட்டே." என்றபடியே எதிரில் கிடந்த நாற்காலியில் வந்து அமர்ந்தான் பிரபாகர்.

மெல்ல நிமிர்ந்து பார்த்தான் வசந்தன், கண்களில் ரத்தக் கொதிப்பு.

"வசந்தா என்ன இது... தண்ணின்னாலே விஷம்னு நினைக்கறவனாச்சேடா நீ..."

''உண்மைதான் பிரபா. ஆனா வாழ்க்கையே விஷமாயிட்ட பிறகு இந்த தண்ணி மட்டும் என்ன பாவம் பண்ணிச்சு."

"என்னாச்சுடா... எதுக்கு இப்படி உளர்றே?"

"உனக்கு உளறலாத்தான் தெரியும், ஆனா நான் இப்பதான் தெளிவா பேசறேன்.''

"உன் பிரச்சினை என்ன. அதைச் சொல்லு."

"என்னத்த சொல்ல... ஒரு பொட்டாச்சி... கேவலம் ஒரு பொட்டச்சி.. பிரபா பொட்டச்சி."

''அதையே எத்தனை தடவை சொல்வே. யார் அவ, உன்னை என்ன பண்ணுனா?''

"என் முதலாளி மக. அவதான் இப்ப எனக்கு எம்.டி.,

"ஓஹோ... மேல் மட்ட விஷயமா?"

"ரொம்ப கேவலப்படுத்தறா பிரபா, அவ வளக்கற நாயைக் கூட கொஞ்சறா. ஆனா நான் அவளுக்கு அதைவிட கேவலமா போய்ட்டேன்."

"அவகிட்ட மோத முடியாமதான் இங்க தண்ணி அடிக்க வந்துட்டியா?''

''வேற வழி. அவகிட்ட அதிகாரம் இருக்கு, ஆ..ஊன்னா வேலைய விட்டு போயிடுங்கறா. எவ்வளவு பேரை அனுப் பிட்டா தெரியுமா?''

''ரொம்ப டேர் டெவிலா இருப்பாளோ?''

"டேர் டெவிலா, அதுக்கும் மேல... பிசாசு அவ, என் கன்னத்துலகூட அறைஞ்சிட்டாடா..."

வசந்தன் சொன்ன கையோடு முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு அழுதே விட்டான்.

''சரிடா. மனசை தேத்திக்க, காலம் இப்படியே போய்டாது.''

''போடா... இந்த மாதிரி ஆறுதல்லாம் யாருக்கு வேணும். எனக்கு அவளை நான் அறையணும். அவ துடிச்சு போய் விழணும், அப்புறமா அவளை ஓட ஓட விரட்டணும். என்னைப் பார்த்தாலே அவ நடுங்கணும். அதுக்கு வழி இருக்கா சொல்லு."

"என்னத்த சொல்ல. இந்த மாதிரி விஷயத்துல நீ சினிமா ஹிரோ ரஜினிகாந்தாவோ, விஜயகாந்தாவோ இருந்தா தொடை தட்டி சவால் விடலாம். ஒரு பாட்டு பாடி முடிக் கறதுக்குள்ள, லட்சாதிபதியாகவோ, கோடீஸ்வரனாகவோ ஆயிடலாம். சம்பந்தப்பட்டவங்களுக்கும் ஏதாவது ஆபத்து வரும். அப்ப டகால்னு போய் நின்னு சண்டை போட்டு அவங்கள காப்பாத்தலாம். அதுவும் இல்லையா அவங்

களுக்கு பயங்கர வீழ்ச்சி வரும்.. நடுத்தெருவுக்கு வந்துடுவாங்க. அப்ப சர்ருன்னு கார்ல போய் நின்னு அவங்க எதிர்க்க இறங்கி அவங்களை மன்னிச்சு நீ இப்பவும் என் இதயத்துல தான் இருக்கே கிட்னியிலதான் இருக்கேன்னு டயலாக் உடலாம். ஏன்னா அது நம்ம சௌகர்யத்துக்கு நாம எழுதிக்கற கதை. ஆனா வாழ்க்கை அப்படி கிடையாது. ஒண்ணு சகிச்சுக்கிட்டு வேலை செய்யணும். இல்லாட்டி போடி தட்டுவாணி நீயும், உன் வேலையும்னு சொல்லிட்டு வந்துடணும். உனக்கு எது சௌகர்யம்?"

"எப்படிடா.. எப்படி வேலைய உதறச் சொல்றே? படாத பாடுபட்டு அந்த வேலையை வாங்கியிருக்கேன். இந்த வேலையைச் சொல்லித்தான் வீட்ல பொண்ணு பார்த்து வெச்சுருக்காங்க. அடுத்த மாசம் கல்யாணம். அந்த கல் யாணம் நடந்தாதான் அதுல வர்ற வரதட்சணை பணத்தை வெச்சு என்அக்காங்களை நான் கரை ஏத்த முடியும், நான் கட்டிக்க போற பொண்ணுக்கு ஒரு கால் ஊனம். பதிலுக்கு அவளோட அண்ணனுங்க இரண்டு பேர், என் அக்காக் களை கட்டிக்க சம்மதிச்சுட்டாங்க."

"அட்றா சக்கைன்னானாம்... இப்படி எல்லாம் மாட்டிகிட்டு இருக்கியா நீ.." என்று கேட்டுவிட்டு ஒரு ஆஃப் ஆர்டர் செய்தான்.

"ஏன் கேக்கறே.? மனசுல கொஞ்சம்கூட நிம்மதி இல்லை. இன்னிக்குகூட அந்த பேமானிக்கு சத்யம் தியேட்டர்ல அவ சினிமா பார்க்க டிக்கெட் எடுத்து கொடுத்துட்டுதான் வந்துருக்

கேன். அவளோட டெலிபோன் பில்லுல இருந்து, லாண்டரி பில் வரை நான்தான் கட்டணும். ஏன்னா நான் அவளோட அந்தரங்கச் செயலாளர். அதாவது பி.ஏ., அப்படிங்கற பேர்ல உள்ள ஒரு அடிமை நாய்."

புலம்பிவிட்டு திரும்பவும் கண்ணீர் விட்டான்.

"ஏண்டா, இப்படி அழ உனக்கு வெட்கமா இல்லையா?"

"வெட்கமாவா... வேதனையா... என்னென்னவோ மாதிரில்லாம் இருக்குடா. எங்க நான் உணர்ச்சிவசப்பட்டு அவளை குத்திக் கொன்னுடுவேனோன்னு கூட தோணுது. மனசுக்கு ரொம்ப பயமாவும் இருக்கு. என்னையே எனக்கு பிடிக்கல. அதனால்தான் என்னை மறக்க இந்த பாருக்கு வந்தேன்."

"எப்படிக் கேட்டாலும் அதுக்கு ஒரு பதில் சொல்றே. அந்த பதிலும் நியாயமாத்தான் இருக்கு."

"என் இடத்துல நீ இருந்தா.. இதைவிட மோசமா இருப்பே."

"இருக்கலாம். சரி. உன் தலை எழுத்துப்படிதானே எல்லாம் நடக்கும்." பிரபாகர் தன் கருத்தை அந்த விதமாக சொல்லி, ஒரு முற்றுப் புள்ளி வைத்தான். நடுவில் அவன் ஆர்டர் செய்த ஆஃப் வந்து சேர்ந்தது. விழுங்கத் தொடங்கினான்.

சற்றுத்தள்ளி ஒரு மனிதர் அவன் பேசுவதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். கிட்டத்தட்ட அரை போதையில் இருந்தார். ஆனாலும், ஒரு ஸ்டெடிநெஸ் தெரிந்தது.

பிரபாகர் ஆஃப்-ஐ விழுங்கிவிட்டு, "வரேண்டா மாப்ள, சாரிடா... உன்னோட உக்காந்து கம்பெனி கீப்அப் பண்ற நிலைல நான் இல்லடா." என்றபடியே வெளியேறினான். அவன் அகலவும் அந்த மனிதர் வந்து எதிரில் அமர்ந்தார்.

"ஹலோ.."

"யார் சார் நீங்க?"

"ஆபத்பாந்தவன்."

"ஆபத்பாந்தவனா... யாருக்கு?''

"உங்களுக்குதான்.. பேசறதை எல்லாம் கேட்டுகிட்டு இருந்தேன். பாவம் உங்களுக்கு நேரமே சரியில்லைபோல இருக்கு."

"ஆமாம் சார்... ரொம்ப மோசம்."

"கவலையே படாதீங்க... எவ்வளவு கெட்ட நேரத்தையும் நல்ல நேரமா மாத்தலாம். வழி இருக்கு."

"அப்படியா... ஆச்சரியமா இருக்கே?"

''ஆமாம், உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கா?''

"முந்தி இருந்தது. இப்ப இல்லை."

"முந்தி இருந்துச்சுல்ல... அதுபோதும். எனக்கு தெரிஞ்ச ஒரு மந்திரவாதி இருக்காரு. அவர்கிட்ட போவோம். அவர் உங்க பிரச்சனையை தீர்த்துடுவாரு.''

"மந்திரவாதியா?" கேட்டுவிட்டு விரக்தியாக ஒரு சிரிப்பு

சிரித்தான்.

"ஏன்.. உங்களுக்கு மந்திரவாதிங்க மேலல்லாம் நம்பிக்கை இல்லையா. நீங்க சைன்ஸை நம்பற ஆசாமியா?''

"மண்ணாங்கட்டி... நான் பாக்காத சாமியாரா, இல்ல மந்திரவாதியா..? நேத்துகூட ஒரு சித்தரை தேடி, பெரிய பாளையம் பூரா சுத்திட்டு வந்தேன். எல்லாம் ஃப்ராடு."

''தப்புதம்பி... ரொம்பதப்பு. எதையும் நம்பிக்கையோட செய்யணும்."

''நீங்க என்ன சொல்றீங்க?"

"வாங்க சொல்றேன்.'' அவன் வசந்தனை தோளில் கை போட்டு இழுத்தபடி, பாருக்கு வெளியே அழைத்து வந்தான். பார் கவுண்டரில் அவனே பணமும் கட்டினான்.

நீங்க எதுக்கு எனக்கு பணம் கட்றீங்க?"

"எல்லாம் ஒரு நேர்த்தி கடன்தான். வாங்கன்னா...'' இழுத்துக் கொண்டு நடந்தான். பிளாட்ஃபாரத்தை ஒட்டி ஒரு இண்டிகா கார் நின்று கொண்டிருந்தது. அதில் வசந்தனை தூக்கிப் போட்டான். அதன்பின் காரும் வேகமாக சீறிக் கொண்டு புறப்பட்டது. காருக்குள்...

''இப்ப எங்க போறீங்க?"

''நான் சொல்லல... அந்த மந்திரவாதிய பாக்க."

''அவர் நிஜமாலுமே பெரிய மந்திரவாதியா?''

"வந்து பாருங்க தெரியும். ஆமா உங்க முதலாளியம்மா

பேர் நந்தினி தானே?"

"நந்தினியேதான். உங்களுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கே.''

''நந்தினியைத் தெரியாதவங்க யார். அதுலையும் இந்த கிஷோருக்கு நந்தினியைத் தெரியலைன்னா வேற யாருக்கு தெரியப்போகுது.''

"உங்க பேர் கிஷோரா?''

''ஆமாம்."

''நீங்க என்ன பண்றீங்க?"

''கார் ஒட்டிகிட்டிருக்கேன்."

''ஜோக்கடிக்கிறீங்களே... என்ன வேலை பாக்கறீங்கன்னு கேட்டேன்."

"அவசியம் தெரிஞ்சுக்கணுமா?"

"என்னைப்பத்தி நீங்க தெரிஞ்சுக்கலாம். உங்களை நான் தெரிஞ்சுக்க கூடாதா?''

''ஐயோடா... கட்டாயம் நீங்க தெரிஞ்சுக்கணும். நானும் உங்களைப் போலவே ஒரு அக்ரோ இண்டஸ்ட்ரிலதான் வேலை பாக்கறேன்."

"வெரிகுட். என்னவா இருக்கீங்க?"

''எம்.டி,யா!"

அந்த பதில் வசந்தனின் பொட்டில் அடித்தது.

''எம்..எம்..எம்.டியாவா., யூ மீன்... மேனேஜிங் டைரக்டர்.''

"எக்ஸாக்ட்லி.."

"எ.. எந்த அக்ரோ இண்டஸ்ட்ரிக்கு.''

"ஸ்டார் அக்ரோ இண்டஸ்ட்ரி."

"ஓ... எங்க போட்டி கம்பெனி அது?''

"எங்களுக்கும் போட்டி கம்பெனிதானே உங்க கம்பெனி"

"ஐய்யோ... நான் இப்படி உங்களோட கார்ல உக்காந்துருக்கறத யாராவது பார்த்தா என் வேலை போயிடுமே.''

வசந்தன் வீறிடாத குறையாக அலறினான்.

"நோ ப்ராப்ளம் மிஸ்டர் வசந்தன். உங்க வேலை போய்டும்கற பயமே உங்களுக்கு தேவையில்லை. ஏன்னா உங்களை எங்க டெய்ரி யூனிட் மேனேஜராவே நான் அப்பாய்ன்ட் பண்ணிக்க தயாரா இருக்கேன்."

அவர் பதிலோடு கார் சிட்டாக பறந்து கொண்டிருந்தது. பூந்தமல்லி நெடுஞ்சாலையில், பூந்த மல்லியை கடந்து ஒரு வயல்காட்டை ஒட்டிய மண் சாலை பக்கமாக திரும்பியது.

புழுதி பறந்தது.

வசந்தன் வாயடைத்து அமர்ந்திருந்தான்.

நேரமோ இரவு பத்துமணி.

அந்நிலையிலும் ஏராளமாய் வியர்த்திருந்தான். போதை அப்படியே இறங்கிவிட்டிருந்தது.

காரும் அந்த மண் சாலையில் நெடுந்தூரம்வரை சென்று

ஒரு கரட்டை ஒட்டி நின்றது. கரட்டின் அடிவாரத்தில் ஒரு குடிசை. குடிசையை சுற்றி மூங்கில் படப்பு வேலிகள். சின்னதும் பெரிதுமாய் மரக்கூட்டம்.

அங்கங்கே தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன. மின்சார வசதி இருக்கிற மாதிரி தெரியவில்லை. வசந்தனுக்கு பயங்கரமான ஒரு இடத்துக்கு, வந்ததுபோல் தோன்றியது.

"சார்... என்ன சார்... என்ன எங்க கூட்டிகிட்டு வந்துருக்கீங்க."

"பயப்படாம வாங்க வசந்தன்." அவர் முன்னே நடந்தார். அவனும் பயந்தபடி பின் தொடர்ந்தான்.

"வா தம்பி... யாரோ அழைக்கிற மாதிரி இருந்தது. இருட்டில் சரியாக தெரியவில்லை. பிறகு ஊன்றிப் பார்க் கவும்தான் தெரிந்தது. யாரோ ஒருவர் ஒரு மரத்தடியில் கட்டிலில் அமர்ந்த நிலையில் அழைத்திருந்தார்.

இருண்ட சூழலில் கரிய வடிவமாக தெரிந்தார். இன்னா ரென்று தெளிவாகத் தெரியவில்லை.

கிஷோர் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்ட மனிதர் அவரின் காலில் விழுந்து வணங்கினார். வசந்த னையும் வணங்கச் சொன்னார். வசந்தன் தயங்கி நின்றான்.

"கும்புடுங்க வசந்தன். சாமி பெரிய மகான். இனிமே உங்களுக்கு நல்ல காலம்தான்." என்று தூண்டிவிட்டார். அவனும் அரைமனதாய் விழுந்தான். அப்பொழுதுதான் அவர் மடியைப் பார்த்தான்.

ஒரு மலைப்பாம்பு ஒன்று குழந்தை போல படுத்திருந்தது. 'ஊக்'கென்று நெஞ்சை அடைத்தது. அவர் அதன் தலையை தடவியபடியே பேச ஆரம்பித்தார்.

"என்ன தம்பி. போன காரியம் ஜெயமா முடிஞ்சுதா.''

"முடிஞ்சுது சாமி... அந்த நந்தினியை பிடிக்கற ஒரு முக்கிய சாவி இன்னிக்கு கிடைக்கும்னு சொன்னீங்க. உண்மையாயிடிச்சு.''

நான் எங்க சொன்னேன். எல்லாம் அந்த திகம்பராயன் கருணை."

அவர் ஆகாயத்தை நோக்கி கையைக் காட்டினார். அப்பொழுது எங்கிருந்தோ ஒரு ஆந்தை பறந்து வந்து அவர் தோளின் மேல் அமர்ந்தது.

"வாடா. எங்க போய்ட்டே?'' என்று அதையும் பாசத்தோடு விசாரித்தார். வசந்தனுக்கு எல்லாமே புதிதாக இருந்தது. புதிராகவும் இருந்தது. பயமும் உள்ளுக்குள் பிரண்டது.

''தம்பி ரொம்ப பயப்படறான். திகம்பராயன்கிட்ட வந்த பிறகு எதுக்கு பயப்படணும்? பயப்பட வேண்டாம்னு சொல்." அவரே கிஷோரிடம் சொன்னது அவன் காதிலும் விழுந்தது.

"பயப்படாதீங்க வசந்தன். அந்த நந்தினி உங்களுக்கு மட்டு மில்ல. எனக்கும் விரோதி. தொழில்ல அவளோட நேரா மோத என்னால முடியலை. நான் காரியம் சாதிக்க நூறு ரூபாய் கொடுத்தா, அவ இருநூறு ரூபாய் தந்து அதை தடுத் திடறா. அவகிட்ட கொஞ்சம்கூட நியாய தர்மம் இல்லை.

ஒரு பெண்ணரக்கியா இருக்கா. அவளை எப்படி அடக்கறதுன்னு யோசிச்சப்போதான் சாமி பத்தி தெரியவந்திச்சு. நேரா மோதி ஜெயிக்க முடியாத அவளை, சாமியைக் கொண்டு ஜெயிக்க முடிவு செய்துட்டேன்."

"எ... எ.. எப்படி?'' மிடறு விழுங்கியபடி கேட்டான் வசந்தன்.

அந்தக் கவலை உனக்கு எதுக்கு. அவளை அழிக்கறது என் பொறுப்பு. அவ அழிஞ்சா உனக்கும் நிம்மதிதானே?"

''நி... நிச்சயமா."

"அப்ப ஒண்னு செய்."

''எ... என்ன?''

"இன்னும் எதுக்கு பயம். நான் நல்லவங்களுக்கு மட்டுமே உதவறவன். அதுக்காகவே அதர்வண வித்தைகளை கத்து வெச்சுருக்கறவன். பாத்தியா. இந்த பாம்பு, ஆந்தை எல்லாம் ராட்சஸ ஐந்துக்கள். ஆனா இவைகளே என்கிட்ட எப்படி அடங்கிக் கிடக்குதுன்னு பார்த்தியா?''

''அ... அதுதான் எப்படின்னு தெரியல."

"தெரிஞ்சா நீ ஏன் வாய்விட்டு அழறே.. பெரிய தலைவனாயிடுவியே.''

"சரிங்க. நான் என்ன செய்யனும்?''

"அதை கிஷோர் சொல்வான். கிஷோர். போகும் போது சொல்லு. இப்ப என்கிட்ட வா."

வசந்தனும் அவரை நெருங்கினான். அவர் தன் கை விரல்களை ஒரு சொடக்கு சொடக்கி அவன் நெற்றியில் கட்டை விரலைத் தீட்டினார். ஒரு கறுப்புத் திலகம் அவன் நெற்றியில் விழுந்தது.

"இந்தத் திலகம் நீ குளிச்சாகூட அழியாது. இது இனிமே உனக்கு காவல். அந்த பெண்ணும் உன்கிட்ட இனி அடா வடியா நடந்துக்க மாட்டா. இதை நீ நாளைக்கே உணருவே."

''நிஜமாவா?''

''நாளைக்கு பார்த்துட்டு சொல்.''

"அவ என் பேச்சையும் கேட்கணும். என்னை கைநீட்டி அறைஞ்சுட்டா, பதிலுக்கு நான் அவளை அறையணும். அப்படியே அவ கழுத்தை நெறிச்சு இந்த டிராகுலால்லாம் ரத்தம் குடிக்குமே. அப்படி நான் குடிக்கணும் முடியுமா?"

வசந்தன் மீண்டும் தீப்பிழம்பானான். அவனது மானவமான உணர்வுகள் குழம்புபோல கொப்பளித்தன. கண்கள் சிவந்து விட்டன. அந்த மந்திரவாதிச்சாமி அதை ஒரு இளக்கார புன்னகையுடன் ரசித்தார்.

"போ... நடக்கும்." என்றார்.

"அதுக்கு நான் எவ்வளவு தரணும்?" அவன் கேட்டதற்கு மீண்டும் அவரிடம் சிரிப்பு.

''நீ எதுவும் தர வேண்டாம். கிஷோர் சொல்றதை செய். அதுபோதும்."

"சரிங்க சாமி..''

கொஞ்சம் பயம் தெளிந்தவனாக கிஷோரைப் பார்த்தான்.

"அப்ப உத்தரவு வாங்கிக்கறேன். சாமி'' கிஷோரும் அவரிடம் சொல்லிக் கொண்டு திரும்பி நடந்தான். அந்த குடிசை வேலியை ஒட்டி ஒரு சிறிய நொச்சிமரம், அதில் ஆடு போல் ஒன்று கட்டப்பட்டிருந்தது. கண்கள் அப்படியே நைட் லைட் பல்பு போல ஒளிர்ந்தன.

"அடேங்கப்பா. இந்த ஆட்டுக்குத்தான் என்ன ஒரு பவர் ஃபுல்லான கண்ணு." என்றான்.

''நல்லா பாருங்க... அது ஆடு இல்ல'' என்றார் கிஷோர். அவனும் ஊன்றிப் பார்த்தான். கிஷோரே ஒரு தீப்பந்தத்தை பிடுங்கி வந்து வெளிச்சத்தைச் காட்டினார்.

வெளிச்சத்தைப் பார்த்த நொடி அந்த மிருகம் ஒரு பாய்ச்சலுடன் பாயப்பார்த்து முடியாமல் போனது. நீண்ட நாக்கு. வரிசையான கோரைப் பற்கள். அது ஒரு ஓநாய்!

"ஓ...ஓ.. ஓநாயா?''

"ஓநாயேதான். வாங்க."

"இந்த ஏரியாவுல இப்படி ஒரு மனுஷரா... இவர்கிட்ட இப்படி எல்லாம்கூட மிருகங்களா?''

இதை இவர் ஏவிவிட்டா நகரத்துக்குள்ளகூட இது வந்துட்டு போகும், ஆனா யார் கண்ணுலையும் படாது.'' நடந்து காரில் ஏறியபடியே சொன்னான் கிஷோர்.

"அது எப்படி?''

"அதான் சாமியோட சக்தி."

"நான்கூட ஒரு சாமியைப்பத்தி கேள்விப்பட்டு அவரை தேடிகிட்டு போனேன். மனுஷன் கண்ணுலையே படலை, ஆனா தேடாமலேயே இந்த சாமியை பார்த்துட்டேன். எல்லாம் உங்களால."

காரில் ஏறி அமர்ந்தபடி அவன் சொன்னதில் கிஷோரின் முகம் மாறிப்போனது.

"எந்த சாமியை தேடிப் போனீங்க?" காரை ஸ்டார்ட் செய்தபடி கேட்டார்.

"பெரிய பாளையத்துக்கு அந்தப் பக்கமா குமாரசாமி சித்தர்னு இருக்காராம். வசிய வித்தைல பேர் போனவராம். நம்ம சினிமா ஸ்டார் வந்தனாவை தெரியுமில்லியா உங்களுக்கு."

"சொல்லுங்க."

"அவளோட புருஷனா இருக்கானே மாரிமுத்து."

"ஆஹாங்.."

"அவன் என் காலேஜ்மெட். பார்க்க மனுஷக்குரங்கு மாதிரியே இருப்பான். அப்படிப்பட்டவனே கிளி மாதிரி இருந்த வந்தனாவை வசியப்படுத்தி கல்யாணம் பண்ணிக் கிட்டான். அதுக்கு பின்னால இருக்கறவர்தான் அந்த சித்தர்."

"கேள்விப்பட்ருக்கேன்... அவரை நீங்க பார்த்தீங்களா

வசந்தன்?"

"இல்ல சார்... தேடிப்போனேன். கண்ணுலையே படலை, எல்லாரும் ஆசிரமம் அமைச்சுகிட்டு நாலு பேர் வரமாட்டாங் களான்னுதான் உக்காந்துகிட்டிருப்பாங்க, இவர் அப்படி இல்லை. வயக்காட்டுக்குள்ள தென்னந் தோப்புல இருப் பாங்கன்னாங்க. அங்க போனா தென்ன மட்டைங்கதான் இருந்தது.

ஒரு வேளை மாரிமுத்து பொய் சொல்லிட்டானோன்னு, கூட தோணிச்சு. வெறுத்துப் போயிட்டேன். ஒரு மாரி முத்துவால ஒரு நடிகையையே வசியப்படுத்த முடிஞ்சுது. ஆனா இந்த வசந்தனால ஒரு சாதாரண பொண்ணுகிட்ட கூட நெருங்க முடியல.''

"டோன்ட் ஒர்ரி... அதான் சாமி சொல்லிட்டாரே இனி பாருங்க."

"பாக்கறேன் சார். பார்த்துட்டு சொல்றேன். ஆமா நீங்க ஏதோ என்கிட்ட கேட்பீங்கன்னு சொன்னாரே சாமி.''

"ஆமாம் வசந்தன்... அவளை அடக்கணும்னா சில விஷயங்கள் வேணும்.''

"என்ன சார்..''

"முதல் தேவை அவளோட உச்சித் தலைமுடி?''

"என்னது... தலைமுடியா?''

''அடுத்தது, அவளோட கால் நகம்."

''நகமா?''

''நகமேதான்.''

''இதெல்லாம் எதுக்கு?''

"இன்னும் இருக்கு, இதுதான் ரொம்ப முக்கியம்.''

"என்னங்க அது."

"அவளோட உள் பாவாடை இல்லேன்னா ஜட்டி.''

''ஐய்யோடா..."

"பதறாதீங்க... இந்த மூணை மட்டும் கொண்டு வந்து கொடுத்துடுங்க. அவளும் காலி, நீங்களும் மேனேஜர் ஆயிடலாம்."

"என்ன சார் நீங்க.. நகம், தலைமுடியகூட எப்படியாவது அவகிட்ட இருந்து அடிச்சிடலாம். உள்ளாடைக்கு எங்க சார் போக."

"இதோ பாருங்க, இந்த மூணையும் நீங்க கொண்டு வந்தா உங்க பிரச்சனைகள் தீரும். இல்லேன்னா பிரச்சினைகள் அதிகமாகும்."

"என்ன சொல்றீங்க."

"சாமி உங்களை விடமாட்டார். ஓநாய் பார்த்தீங்கதானே?"

''ஆமாம்.''

"அது உங்க பெட்ரூமுக்கே வரும்."

"எதுக்கு?''

"சொன்னபடி நீங்க நடக்கலைன்னா அதுவந்து உங்க ரத்தத்தை குடிச்சுட்டு போய்டும்."

"எ... என்ன சார் இது? உதவி செய்யறதா சொல்லி உபத்ரவத்துல தள்ளிவிடறீங்க."

''இப்ப மட்டும் என்ன... சந்தோஷமாவா இருக்கீங்க?"

''இல்லதான். ஆனா நீங்க சொல்றதுக்கு நான் எங்க சார் போவேன். அவ என் எஜமானி. அவ நிழலைக்கூட தீண்ட முடியாத டிஸ்டன்ஸ்ல இருக்கறவன் நான்."

"அந்த டிஸ்டன்ஸ் குறையும். அவ இனிமே உங்களை தப்பா பேசமாட்டா. அதை நீங்க நாளைல இருந்து பார்ப் பீங்க."

''நிஜமாவா சார்."

"பார்த்துட்டு சொல்லுங்க... அதே சமயம் நான் கேட்ட மூணு விஷயமும், எப்ப உங்க கைக்கு கிடைச்சாலும் சரி, எனக்கு போன் பண்ணுங்க. அது கிடைச்சதுல இருந்து அதிக பட்சம் ஒருநாள்தான் அவ நடமாடவே செய்வா. அதுக்குப் பிறகு அவ காலமெல்லாம் படுத்த படுக்கைல தான்.'' கிஷோர் கார் ஓட்டியபடி சொல்லும் விதமே பயங்கரமாக இருந்தது.

வசந்தனும் வேறு வழியில்லாமல் தலையை ஆட்டினான்.

# 6

***வ**சியம் என்பதற்கு இன்னொரு பொருள் மயக்குவது. மயக்கம் என்றாலே 'தன்னிலை இழப்பது' என்பதுதான்.*

*தன்னிலை இழப்பது என்பதற்கு இன்னொரு பொருளும் உண்டு. அதுதான் பக்தி, எவன் ஒருவன் பக்தியால் இறைவனிடம் தன்னை இழக்கிறானோ, அவனே பேரருளுக்கு உற்றவன் ஆகிறான். ஆனால், இறைவனிடம் மயங்கி தன்னை இழப்பதற்கும், பௌதீக அழகுகளிலும், சாமர்த்யங்களிலும் மயங்கி, தன்னை இழப்பதற்கும் மிகமிக விதியாசம் உள்ளது. இறைவனிடமி நாம் தம்மை இழந்தால் முக்தி கிட்டும்.*

*பௌதீக மயக்கங்களிடம் நாம் நம்மை இழந்தால் அதே முக்தி தூரப் போய்விடும். உலக வாழ்வின் பற்றுதல் ஏற்பட்டு அதனாலேயே ஆசை அதிகரித்து தவறுகள் செய்து பின் அந்த வினைகளில் சிக்கிக் கொண்டு, மீள முடியாதபடி அல்லாடத் தொடங்கி விடுவோம்.*

*இதனாலேயே வசிய சித்தி பெற்றவர்கள் அதை பௌதீக விஷயங்களுக்கு பயன்படுத்தாமல் இறைவனை வசப்படுத்த அதை ஒரு சாதனமாக கொண்டார்கள்.*

*சில வசிய மந்திரங்கள் பற்பல தேவதைகளை நமக்கு அடிமையாக்கும். அந்த தேவதைகளிடம் இருந்து நாம் நம் வினைத் துன்பங்களுக்கு விடுதலை கேட்க வேண்டும். மாறாக அவைகளிடம் இகபர சுகங்களை யாசிக்கக் கூடாது.*

***வினைத் துன்பங்கள் நீங்கிய நிலையில் வசீகரிப்பும் அதிகரித்து அதன் காரணமாக இறைவனை எண்ணிச் செய்யும் தவமானது வெகு வேகமாக ஈடேறும் பலநூறு ஆண்டுகள் தவம் செய்து அடைய வேண்டிய பலனை, வசீகரிப்பு மிகுந்தவர்கள் சில ஆண்டிலேயே அடைந்திட லாம். அஷ்டமா சித்துவில் 'வசிய சித்து'வின் உண்மை யான பணி இதுவே. அதற்கு மாறாக இதை பயன்படுத்து கின்றவர்கள் உலக வாழ்வில் உழன்று கொண்டே இருப்பார்கள், குட்டிக்குட்டி தேவதைகளிடம் சிக்கிக் கொண்டு விடுவார்கள். முதலில் அவர்களுக்கு கட்டுப்படும் அந்த தேவதைகள் பின்னர் அவர்களையே விழுங்கிவிடும்.***

நந்தினி பேலஸ்!

கொட்டிவாக்கம் பகுதியில் அனேகமாக நிஜமான ஒரு அரண்மனையைப் போலவே இருக்கும் ஒரே மாளிகை என்று இதைச் சொல்லலாம். சமீபத்தில்தான் கிரகப் பிரவேசம் செய்திருந்தார் தொழிலதிபர் ராமச்சந்திரன்,

அவரது மகள்தான் நந்தினி. அது என்ன பொல்லாத நேரமோ கிரகப்பிரவேசம் அன்றே பாத்ரூமில் வழுக்கி விழுந்து கால் எலும்பு முறிந்து விட்டது. பெரிய மாவுக்கட்டுப் போட்டு ஆறு மாசத்துக்கு அசையக்கூடாது என்று சொல்லி படுக்கப்போட்டு விட்டார்கள். அதனால்தான் நந்தினி ஆபீஸ் பொறுப்பை ஏற்கும்படி ஆயிற்று. ஆனால் அவளுக்கு அந்த பொறுப்பெல்லாம் துளிகூட பிரியமேயில்லை.

உள்ளபடியே அந்தப் பொறுப்புக்கு குறி வைத்திருந்தவன் சுகுமார். அவளுடைய மாமன்தான். ஆனால் தன் நிறுவன

உரிமையை ராமச்சந்திரன் அவ்வளவு சுலபத்தில் சுகுமாரிடம் தந்துவிட விரும்பவில்லை.

அவனுக்கோ நந்தினி மேலேயே ஒரு கண். அவளை அடைந்து விட்டால், 'பைவ் ஸ்டார் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ்' என்கிற அந்த நிறுவனமும் தானாக அவனுக்கே சொந்தமாகி விடும். ராமச்சந்திரனுக்கு பிள்ளைகள் இல்லை. நந்தினி ஒருத்திதான். எனவே மருமகனாகிவிட்டால் சொத்து தானாக வசப்பட்டுவிடும் என்பதெல்லாம் அவன் நம்பிக்கை.

அதற்காக நந்தினியையும் வசீகரிக்க அவன் தவறவில்லை.

நந்தா... ஏன் இவ்வளவு அழகா இருந்து என்னை இம்சைப் படுத்தறே. உன்னைப் பார்த்துட்டு எந்த பொண்ணைப் பார்த்தாலும் அவங்க நல்லாவே இல்லை." என்று ஒரு நாளைக்கு ஒரு முறையாவது கூறிவிடுவான். அவளும் சிரிப்பாள். அவன்தான் ஆபீஸ் விஷயத்திலும் அவளை ஏற்றிவிடுபவன்.

அவள் ஆபீஸ் விஷயத்தில் சிக்கலுக்குள்ளாக வேண்டும். தன்னால் நிர்வகிக்க முடியவில்லை என்று கையை உதற வேண்டும். இதுதான் அவன் எதிர்பார்ப்பு. அதற்கு தகுந்தாற் போலவே இருந்தது. அவனது பேச்சும் செயலும்.

இன்றும் நந்தினி ஆபீஸ் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

கிளம்பும் முன் அப்பா எதிரில் போய் நிற்பாள். டேக் கேர் மை சைல்ட்" என்பார் அவரும். நான் இருக்கேன்ல அங்கிள். உங்களுக்கெதுக்கு அநாவசியக் கவலை" என்றும்

ஒரு பதில் வரும். அது சுகுமாரின் குரலாகத்தான் இருக்கும். இன்றும் அப்படியே நடந்தது.

ஒரு அரபிக்குதிரைபோல நடந்து சென்று காரில் ஏறி னாள். பக்கத்திலேயே அவனும் ஏறி அமர்ந்து கொண்டான். அவளே டிரைவ் செய்தாள்.

"என்னமா டிரைவ் பண்றே தெரியுமா. உன் தன்னம்பிக்கை யாருக்கும் வராது." என்று காரிலேயே ஆரம்பித்து விட்டான்.

அவளும் சிரித்துக் கொண்டே, "ஏன் சுகுமார். என்னை புகழாம உன்னால ஒரு நாள்கூட இருக்க முடியாதா?'' என்று கேட்டாள்.

"முடியாதுன்னுதான் நினைக்கறேன். நானும் உன்னை ஒரு நாளாவது திட்டணும்னுதான் பாக்கறேன். ஆனா நீ நான் திட்ற மாதிரி நடந்துக்க மாட்டேங்கிறியே. ஆபீஸ்ல நீ கண்டி -ஷனோட நடந்துக்கறதும், ஒரு டெரரா எல்லோரையும் நினைக்க வைக்கறதும். ஓ.. ஃபன்டாஸ்டிக்''

"அப்படி இல்லேன்னாதான் எல்லாரும் ஏமாத்திடு வாங்கன்னு சொல்றியே."

"நிச்சயமா. இது மேல் ஷாவனிஸ்ட் வேர்ல்ட், உன்னைப் போல பெண்கள்ளாம் அழகிப் போட்டிக்கு போகத்தான் லாயக்குன்னு சொல்ற உலகம் இது. நீ கிரிப்பா இருந்தாதான் உன் அழகுகூட யாருக்கும் பெரிசா தெரியாது. இல்லே மேனேஜரே உனக்கு லவ் லெட்டர் எழுதிடுவார்.''

அவள் அதைக் கேட்டு பெரிதாக சிரித்தாள். மார்பு

தளும்பியது. வெங்காயச் சருகுச் சேலை விலகியது. அவனோ அதை நேர் செய்துகொள்ளச் சொல்லாமல் விழுங்குவது போல பார்த்தான். அவளும் அதை கவனித்து விட்டு, ''ச்சீ... நீ திருட்டுப் பையன்டா" என்றபடி அதை நேர் செய்து கொண்டாள்.

"என்ன பண்ணட்டும். நீதான் திருட வைக்கிறியே, அவன் அதற்கும் ஒரு விளக்கம் கொடுத்தான். ஒன்று மட்டும் புரிந்தது.

அவளை அவன் அவளாக இருக்கவிடவில்லை. புகழ்ந்தே அவளை கவிழ்த்துக் கொண்டிருந்தான். அவளுக்கும் தான் கவிழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே தெரியவில்லை.

"ஆங்... உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்."

"சொல்லு சுகுமார்.''

"ஸ்டார் அக்ரோ கிஷோர் போன வாரம் போன் பண்ணியிருந்தான். நீ அவனுக்கு அப்பாய்ன்ட்மென்ட் கொடுத்திருந்தியா?''

''ஆமாம்."

"அவன் நம்ம எதிரி. அவனுக்கு எதுக்கு அப்பாய்ன்ட்மென்ட் கொடுத்தே?''

"என்கூட பேசணும்னான். நான் ஐ மீன் நாம அவங்க விஷயங்களை ரொம்ப தப்பா புரிஞ்சு வெச்சுகிட்டிருக்கோம் அது என்னன்னு சொல்லணும்னான்."

"நான்சென்ஸ். அவனை நீ சந்திச்சா, பேசியே உன்னைக் கொன்னுடுவான். ரொம்ப மிஞ்சினா கால்ல விழுவான் உனக்குதான் இளகின மனசாச்சே, அப்புறம் அவன் வேலை சுலபமாயிடும். அதனால நான் அந்த அப்பாய்ன்ட் மென்ட்டை கேன்சல் பண்ணி இனிமே போன் பண்ற வேலை வெச்சுக்காதேன்னுட்டேன். வெச்சு வாங்கு வாங்குன்னு வாங் கிட்டேன்."

அவள் அதைக் கேட்டு சிரித்தாள்.

அவன் செயலின் பாதிப்பை அவளால் உணர முடிய வில்லை. அதே வேளையில் காரும் ஒரு முனையில் தேங்கி நின்றது.

அருகில் ஒரு சிறிய அம்மன் கோவில். காரில் இருந்த படியே கன்னத்தில் போட்டுக் கொண்டாள். பூசாரி ஓடி வந்தார். விபூதித் தட்டை நீட்டி பிரசாதம் தந்தார். வாங்கி நெற்றியில் இட்டுக் கொண்டாள். தட்டிலும் ஒரு பத்து ரூபாயை போட்டாள். பூசாரி சிரித்தார். அம்மா நீங்க போன வாரம் போட்ட ஐநூறு ரூபாய்ல அம்மனுக்கு ஒரு சூலா யுதத்தை வாங்கி வெச்சிட்டேங்க. " என்று கையை நீட்டி அந்த சூலாயுதத்தைக் காட்டினார்.

அவளும் பதிலுக்கு அங்கீகரித்தபடி சிரித்துவிட்டு கிளம் பினாள்.

"உன்னை எல்லா விஷயத்திலும் நான் மாத்திட்டேன். ஆனா இந்த பக்தி விஷயத்துலதான் முடியல.." சுகுமார் திரும்ப ஆரம்பித்தான்.

"ஏய்... இந்த ஒரு விஷயத்துலையாவது என்னை என் போக்குல போகவிடேன்."

"என்ன நந்தா... கோவிலுக்கு போறதுன்னா கபாலீஸ்வரர் கோவிலுக்கு போ, வடபழனி முருகன் கோவிலுக்கு போ. எதுக்கு இப்படி பிளாட்ஃபாரம் கோவிலுக்கெல்லாம் மதிப்பு கொடுக்கறே. நான் மட்டும் கார்ப்பரேஷன் மேயரா வந்தேன், முதல் வேலையா இந்த பிளாட்ஃபாரம் கோவிலை எல்லாம் இடிச்சு தள்ளிட்டுதான் மறுவேலை பார்ப்பேன்."

''போதும்...பிளாட்ஃபாரங்கள் கோவிலாகறது தப்பு இல்லை சுகு. கோவில்தான் பிளாட்ஃபாரமாகக் கூடாது.''

''அடேங்கப்பா. தத்துவமா?''

அவன் பதிலுக்கு சிரித்தாள்.

"பைதபை இன்னொரு விஷயம்."

''என்ன?''

"உன்னோட பி.ஏவா இருக்கானே வசந்தன்.?''

''அவனுக்கென்ன?''

"சரியான பொம்பளப் பொறுக்கி! ஜாக்ரதையா இரு.''

"இப்ப அப்படிதானே இருக்கேன்,ஒரு அறைகூட அறைஞ் சிட்டேன் தெரியுமா?"

"குட்."

"அறைஞ்சது அவன் என்கிட்ட செய்த தப்புக்கு இல்ல. யாரோ ஒரு பொண்ணை அவன் லவ் பண்ணி ஏமாத்திட்

டான்னு சொன்னியே அதுக்காக. அதை மனசுல வெச்சு கிட்டுதான் அடிச்சேன்.''

"குட். ஒரு டிஸ்டன்ஸ்லயே வை."

சுகுமாரின் ஆமோதிப்புக்கு பின்னால் ஒரு குழ்ச்சி ஒளிந்திருந்தது.

அது என்ன என்றுதான் தெரியவில்லை. கார் ஒரு வளைவில் திரும்பும்போது குறுக்கே ஒருவர், சமாளித்து பிரேக் பிடித்தாள். இருந்தும் கார் அவர் மேல் ஏறியதை உள்ளிருந்தபடியே உணர முடிந்தது. முன்பக்க சக்கரம் ஒரு மேட்டின் மேல் ஏறி இறங்கியதுபோல் இருந்தது.

''ஐய்யோ சுகுமார்... ஆள் உயிரோட இருக்கானான்னு பாரு." அலறினாள்.

சுகுமாரும் அலறிக் கொண்டு இறங்கினான். பார்த்தான். காருக்கு கீழே ஒரு முதிய உருவம், அட... குமாரசாமி சித்தர்!

ஏதோ ஒரு பள்ளத்தில் இருந்து எழுந்து வருகிறவர் போல எழுந்து நின்றார்.

ஒரு கீறல்கூட அவர்மேல் இல்லை.

''அப்பாடா.." சுகுமாரிடம் பெருமூச்சு.

"என்னப்பா... பார்த்து வர்றது இல்லையா?''

"பார்த்தா, நாங்களா... அறைஞ்சேன்னா? குறுக்க வந்து விழுந்துட்டு என்னை குத்தம் சொல்றியா?''

''நான் குறுக்க வந்தேனா.. அடப்பாவி..'' அவரும் செல்லமாக கோபித்தார்.

"சரிதான் போய்யா... இடியட்." என்று பதிலுக்கு கத்திக் கொண்டே சுகுமார் காரில் ஏறினான். நந்தினி ஆச்சரியத்தில் உறைந்திருந்தாள்.

''நந்தா...காரை எடு, நல்லவேளை, அவனுக்கு ஒண்ணும் ஆகலை. நான்கூட ஆள் பரலோகம் போயிருப்பான் போலீஸ் கேஸ் அது இதுன்னு அல்லாடப் போறோம்னுதான்நினைச்சேன்."

முணுமுணுத்தான். காரும் புறப்பட்டது.

சித்தரின் பார்வையோ மர்மமாய் அதன் மேலேயே படிந்திருந்தது.

அப்படியே பார்வையை திருப்பினார். பலர் ஆச்சரியமாய் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"எப்படிங்க உங்களுக்கு எதுவும் ஆகலை?'' என்று கூட ஒருவர் கேட்டார்.

"எல்லாம் அந்த ஈஸ்வரன் கருணை." அவர் ஆகாயத்தை நோக்கி கைகளை காட்டினார். தொடர்ந்து நடந்தார்.

தென்னந்தோப்பை விட்டு இப்படி தெருவுக்கு வந்த மர்மம் விளங்கவில்லை.

எதிர்லேயே இன்னொரு படகு கார்.

அது அவர் அருகில் சாய்ந்தபடி நின்றது.

"சாமி... ''உள்ளிருந்து மாரிமுத்து உதிர்ந்தான்.

"எங்க சாமி இங்க...?" பதறினான்.

"எல்லாம் உன்னாலதான்."

"என்னாலையா..?''

"பின்ன... ஒருத்தன் மனசுல என்னைப்பத்தி நீ போட்ட விஷயம் தப்புத்தப்பா வேலை செய்ய ஆரம்பிச்சுடுச்சே."

"என்ன சாமி சொல்றீங்க?"

"நீ போ.. ஒழுங்கா உன் வேலைகளை செய். எப்பொழுதும் போல உண்மையா இரு. உண்மைதான் உன் பலம். அதை மட்டும் இழந்துடாதே. மத்ததெல்லாம் தானா நடக்கும்.''

"நான் ஒண்ணு கேட்டா நீங்க ஒண்ணு சொல்றீங்களே."

"போப்பா... இப்ப அப்படிதான் தெரியும். நேர்வழியில போகவே எப்பவும் முயற்சி செய்யுங்க. குறுக்கு வழி வேண் டாம். குறுக்கு வழிங்கறது ஆத்திர அவசரத்துக்கு. அதுவே வாழ்க்கையாகிடக் கூடாது.''

"சாமி.. புரியற மாதிரி பேசுங்க."

''இப்ப புரியாட்டியும் பின்னால புரியும். சரி நீ போ. என்னைப்பத்தி மட்டும் நீ யார்கிட்டேயும் பேசக்கூடாது. ஞாபகம் இருக்கட்டும். எனக்கு யாரோட பாராட்டும் தேவை இல்லை.. யாரோட பணிவும் தேவையில்லை... நிஜமான சித்தன் கூட்டம் சேர்த்துக்க மாட்டான்... அவன் தனி யானவன். தனியா பூமிக்கு வந்து, தனியாவே தன்னை

உணர்ந்து தனி வழியாலே போய்ச் சேர்றவன் அவன். புரியுதா?''

அதட்டலாக கேட்டுவிட்டு விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தார். மாரிமுத்துவுக்கு தலையைச் சுற்றியது. அவரைப் பின்தொடரவும் தைரியும் இடம் தரவில்லை.

அவரது நடை படு தீவிரமாக இருந்தது. பல இடங்களில் வாகன ஓட்டம் பற்றி கவலையே படாமல் குறுக்கே புகுந்து சென்றார். ஓரிடத்தில் மழைநீர் நிறைய தேங்கி இருந்தது. அங்கே போய் கச்சிதமாக நின்று கொண்டார். அதில் ஏதோ காரணம் இருக்கிற மாதிரி தோன்றியது. அதேசமயம் அந்த சாலையின் ஒரு புறத்தில் வசந்தன் வந்து கொண்டிருந்தான். அவர் அவனுக்காகவே நின்று கொண்டிருக்கிற மாதிரி இருந்தது. ஒரு பழைய ஸ்கூட்டரில் தடதட வென்று வந்தவன் கச்சிதமாக அந்த மழைநீர்அருகே வரவும் அந்த ஸ்கூட்டரை யாரோ பின்னால் பிடித்து இழுத்தது போல ஆட்டம் கண்டு அப்படியே கீழே விழுந்தான். உடம்பெல்லாம் மழைநீர்ச் சேறு. தலை, முகம் என்று எல்லா பாகங்களிலும் அந்த செங்குழம்பு நீர்பட்டு ஓடியது.

பதறிப்போனதுபோல சாமி ஓடி வந்தார்.

அவனைத் தொட்டுத் தூக்கினார். முகம், கை, கால்களை எல்லாம் துடைத்து விட்டார்.

"பார்த்து வரணும் தம்பி. கபாலத்துல அடிபட்டா என்னத் துக்காவறது?'' என்று கேள்வி வேறு கேட்டார்.

"உங்களை நான் எங்கையோ பார்த்துருக்கேன். அவனும் எழுந்து நின்று ஸ்கூட்டரை ஒதுக்கியபடியே சொன்னான்.

"ஆமாம் தம்பி. பெரியபாளையம் பக்கம் காட்டுப் பக்கமா தேடிகிட்டு வந்தீங்களே."

''அப்ப, அப்ப... நீங்க.?"

''நான் யாருங்கறதா முக்கியம்? எல்லாம் நல்லவிதமா நடந்தா நான் எதுக்கு. வசியம்தான் எதுக்கு?''

''நீங்க... நீங்க..."

"போங்க... ஆபீசுக்கு போங்க, உண்மை புரியும். நான் ஒரு காரியம் பண்ணப் போறேன். அப்படி எல்லாம் பண்ணக் கூடாது தான். இருந்தாலும் ஆபத்துக்கு தப்பில்ல. என்ன பண்றது? அந்த மாரிமுத்து என்னைப்பத்தி உங்ககிட்ட உளறிட்டானே?"

''ஐய்யா.. நீங்களா அந்த சித்தர்."

"சித்தராவது... பத்தராவது... மனுஷன். அல்ப மனுஷன் அம்புட்டுதான்."

''இல்ல... நீங்க பூடகமா ஏதோ பேசறீங்க."

''வெளிப்படையாவே பேசறேனே. ஒருத்தரை ஜெயிக்க குறுக்கு வழியில எல்லாம் போகக்கூடாது. கடவுள்கிட்ட போய் வேண்டிக்கலாம். சாமி எனக்கு மன பலத்தைத் தா. கூடவே துணை இருன்னு.

இன்னொண்ணு சொல்றேன்.

நந்தினி மாதிரி பொண்ணுங்களை அலட்சியப் படுத்தி னாலே போதும். அவங்க ஆடிப்போயிடுவாங்க. கர்வத்தை துணிச்சலா பதில் கர்வத்தோட சந்திக்கணும். அழுக்கு விளையாட்டு கூடாது.

ஒரு பக்கம் பரிபூரணமான பிரார்த்தனை. மறுபக்கம் திடமான உழைப்பு. இதுதான் யாரையும் வசீகரிக்கும். மத்தபடி அவ அறைஞ்சிட்டா நான் திருப்பி அறையணும். ரத்தத்தை குடிக்கணும்னு சொல்றது மிருக வெறி. புரியுதா..?''

கேட்டார். அவனும் வாய் பிளந்தான். நடுவில் ஒரு டவுன் பஸ்ஸின் குறுக்கீடு, அது பறந்து மறைந்த நொடி அவரையும் பார்க்க முடியவில்லை.

எங்கே போனார்?

கேள்வியோடு ஸ்கூட்டரில் ஏறி அமர்ந்தான். அதன் ரியர் மிர்ரரில் முகத்தை பார்த்தான். முதல் நாள் நெற்றியில் தீட்டப் பட்டிருந்த அந்த மைத்திலகத்தை காணவில்லை. குளிக்கும் போதுகூட கலையவில்லை. இப்பொழுது எப்படி அழிந்தது. என் முகத்தை தன் கைத்துண்டால் துடைத்தது இந்தச் சாமி தான். அதன் காரணமாக இருக்குமோ?

ஆச்சரியமாக, அதிர்ச்சியாக எல்லாமுமாக இருந்தது.

ஆபீசுக்குள் நுழைந்த போது இன்னொரு அதிர்ச்சி காத்தி -ருந்தது."

"மேடம் வந்த கார் ஆக்சிடென்ட் ஆயிடிச்சு, தலைகால்னு எல்லா இடத்துலையும் அடி. ஆஸ்பத்திரியில இருக்காங்க."

தகவல் தெரிந்த நொடி ஆஸ்பத்திரிக்கு ஓடினான்.

நந்தினி தலைமுதல் கால்வரை பாண்டேஜ் கட்டுடன் கிடந்தாள்.

தலைமுடி, நகம் என்று எதையும் கொஞ்ச நாளைக்கு கற்பனை செய்துகூட பார்க்க முடியாது.

அவனுக்கு அடுத்து என்ன செய்வதென்றே தெரியவில்லை. பக்கத்து வார்டில்தான் சுகுமாரும் கிடந்தான். உயிர் பிழைப்பது கடினம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்த நிலையிலும் அவன் அருகில் இருந்த மேனேஜரிடம் முக்கி முனகி பேசுவது காதில் விழுந்தது.

"சார். நந்தினி ரொம்ப நல்லவ, அவளை ரொம்ப தப்பாவே கைட் பண்ணிட்டேன். பூமாதிரி இருந்தவ என்னாலதான் புயல் மாதிரி தெரிஞ்சா, மேனேஜ் பண்ண முடியாம அவ தடுமாறனும் நான் சீட்டுக்கு வரணும்கறதுக்காக அப்படி அவளை ஆட்டி வெச்சேன். ஆனா இப்படி ஒரு முடிவு வரும்னு எதிர்பார்க்கல. இனி நான் பொழைக்க மாட்டேன். அதனால பாதகமில்லை. நம்ம கம்பெனி ஒரு நல்ல கம்பெனி. போட்டியாளர்களால நாம அழிஞ்சுடக்கூடாது. காப்பாத்துங்க. ப்ளீஸ்." அந்த ப்ளீஸ்க்கு பிறகு அவனிடம் உயிரில்லை. போய் விட்டது. மேனேஜர் அப்படியே ஒடிந்தவராக சாய்ந்தார். பார்த்துக் கொண்டிருந்த வசந்தனுக்கும் எவ்வளவு பெரிய தவறு செய்யத் தெரிந்தோம் என்கிற எண்ணம் ஏற்பட்டு, நல்லவேளை என்கிற சமாதானமுடன் அது கலைந்தும் போனது.

அதேசமயம் இன்னொரு தகவலும் காதில் விழுந்தது.

இவங்க கார் மேல மோதி ஆக்சிடென்ட் பண்ணின நபரும் செத்துட்டாராம். அவர் பேர்கூட கிஷோரரோ என்னவோ சொன்னாங்க. நல்லவேளை மேடமாச்சும் தப்பிச்சாங்களே!

வசந்தனுக்கு சர்வாங்கமும் ஜில்லிட்டு விட்டது.

என்ன பேசுவது, எதைப் பேசுவது என்றே தெரியவில்லை. தலையை தேய்த்துக் கொண்டான்.

அருகில் ஜன்னல்... புறத்தில் ஒரு மேம்பாலம், அதில் குமாரசாமி சித்தர் ஏகாந்தமாக நடந்து போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. அவர் பேசியதெல்லாமும் உள்ளே ஓடத் தொடங்கியது.

''பரிபூரணமான பிரார்த்தனை... திடமான உழைப்பு. இதுதான் யாரையும் வசீகரிக்கும்.''

அவர் சொன்னதை அப்பொழுதே செயல்படுத்தத் தொடங்கி நந்தினி படுக்கையை நெருங்கினான்.

அவள் அரைப்பார்வை பார்த்தாள்.

''டோன்ட் ஒர்ரி மேடம். நீங்க இல்லேங்கற குறை தெரியாம பார்த்துக்கறோம். ஆக்சிடென்ட் உங்களுக்கு தான், கம்பெனிக்கு கிடையாது. அது முன்னைவிட பொறுப்பா இனி செயல்படும். நீங்க சீக்கிரமா குணமாகணும். வேண்டாம்.. வேண்டாம்... மெல்லவே குணமாகுங்க அதுபோதும். ''

அவன் பேச்சை அவள் பனித்த விழிகளோடு கேட்டுக் கொண்டாள். நன்றி சொல்வதற்காக கைகளை கூப்பினாள்.

அவன் அதெல்லாம் எதற்கு என்கிறமாதிரி ஆபீசுக்கு புறப் பட்டு விட்டிருந்தான்.

"சபாஷ்..."

அவளுக்குள் முதல் தடவையாக அவன் அங்கீகரிக்கப் பட்டான்.

# முற்றும்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in